மீன்பிடித் தொழிலாளர்களுக்கு
ஆதரவு அளிக்கும்
சர்வதேச இணையம்

உணவுப் பாதுகாப்பு மற்றும் வறுமை ஒழிப்பு என்ற பின்னணியில்

# நிலைத்தன்மையுள்ள சிறுவீத மீன்பிடியைப் பாதுகாப்பதற்கான தன்னார்வ வழிகாட்டுதல்கள்

(in Tamil)



Published by arrangement with the
Food and Agriculture Organization of the United Nations (FAO)
by the International Collective in Support of Fishworkers

உணவுப் பாதுகாப்பு மற்றும் வறுமை ஒழிப்பு என்ற பின்னணியில்

# நிலைத்தன்மையுள்ள சிறுவீத மீன்பிடியைப் பாதுகாப்பதற்கான தன்னார்வ வழிகாட்டுதல்கள்

மீன்பிடித் தொழிலாளர்களுக்கு ஆதரவு அளிக்கும் சர்வதேச இணையம்
27 கல்லூரி சாலை, சென்னை 600 006 – இந்தியா

இந்த நூல் Voluntary Guidelines for Securing Sustainable Small-scale Fisheries in the Context of Food Security and Poverty Eradication (உணவுப் பாதுகாப்பு மற்றும் வறுமை ஒழிப்பு என்ற பின்னணியில் நிலைத்தன்மையுள்ள சிறுவீதமீன்பிடியைப் பாதுகாப்பதற்கான தன்னார்வ வழிகாட்டுதல்கள்) என்ற தலைப்பில் ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய நிறுவனம் ஆங்கிலத்தில் வெளியிட்டதாகும். மொழியாக்கத்தில் ஏதேனும் வேறுபாடுகள் இருக்கும் என்றால், ஆங்கில வடிவத்தில் உள்ள வாசகங்களே செல்லுபடியானவை என எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்.

இந்த நூலில் குறிப்பிடப்பட்டுள்ள எந்த ஒரு நாட்டின், பிரதேசத்தின், பெருநகரத்தின் அல்லது ஒரு பகுதியின் அல்லது அதன் அதிகார அமைப்பின் அல்லது அதன் எல்லைகள் பற்றிய சட்டபூர்வ நிலை அல்லது வளர்ச்சி நிலைகுறித்தோ அல்லது எல்லைகள் பிரிப்பு குறித்தோ பயன்படுத்தப்படும் குறிப்பான சுட்டுப் பெயர்கள் / பதவிப் பெயர்கள் ஐக்கிய நாடுகள் சபையின் உணவு விவசாய அமைப்பின் கருத்துக்கள் என்று கொள்ளப்படக் கூடாது, காப்புரிமை பெற்ற அல்லது பெறப்படாத ஒரு குறிப்பிட்ட பண்டம் அல்லது உற்பத்தி கம்பெனி குறிக்கப்பட்டிருக்கிறது என்றால் அவற்றை குறிப்பிடப்படாத, அதே தன்மையுள்ளதைக் காட்டிலும் விரும்பத்தகுதந்தது என்பதாக FAO ஒப்புக்கொண்டதாகவோ அல்லது பரிந்துரைப்பதாகவோ பொருளாகாது. இந்த தகவல் தொகுப்பில் உள்ள கருத்துக்கள் எழுதியவரின் / எழுதியவர்களின் கருத்தே அன்றி FAOவின் கருத்து என்று கருதப்படக் கூடாது.

ISBN: 978-93-80802-41-1

© ICSF, 2015

தமிழாக்கம்: உஷா

உலகெங்கும் உள்ள மீன்பிடித்
தொழிலாளர்களின் வாழ்க்கை
முன்னேற்றத்திற்காக ஓய்வின்றி உழைத்த,
இந்த வழிகாட்டு நெறிகளை
உருவாக்குவதற்கு மதிப்பிட முடியாத
பங்களிப்பு செய்த சந்திரிகா ஷர்மாவைக்
கௌரவிப்பதற்காக

# நுழையும் முன்...

மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்த, ஆனால், இதுநாள் வரை கண்டுகொள்ளப்படாத சிறுவீத மீன்பிடி துறைக்கென்று முழுமையாக உருவாக்கப்பட்ட, சர்வதேச அளவில் ஒப்புக்கொள்ளப்பட்ட முதல் சர்வதேசச் சட்டப் பத்திரமாக “உணவுப் பாதுகாப்பு மற்றும் வறுமை ஒழிப்பு என்ற பின்னணியில் நிலைத்தன்மையுள்ள சிறுவீதமீன்பிடியைப் பாதுகாப்பதற்கான தன்னார்வ வழிகாட்டுதல்கள்” அமைந்துள்ளது.

உள்ளூர் சமூகங்களுக்குள்ளும், அவர்களின் பாரம்பரியம் மற்றும் மதிப்பீடுகளில் ஆழமான வேர்கொண்டதாகச் சிறுவீத மீன்பிடி துறை இருக்கிறது. சிறுவீத மீன்பிடியாளர்களில் பலர் சுயத் தொழில் செய்பவர்களாக இருப்பார்கள். அவர்கள் சார்ந்ததுள்ள குடும்பம் அல்லது சமூகத்தினரின் நுகர்வுக்காக மீனை அளிப்பவர்களாக இருப்பார்கள். இத்துறையில் பெண்கள் குறிப்பிடத்தக்க பங்காற்றுகிறர்கள். குறிப்பாகப் பெண்கள் மீன்பிடிக்குப் பிந்தைய நடவடிக்கைகளிலும் பதப்படுத்தும் நடவடிக்கைகளிலும் முக்கியப் பங்காற்றுகின்றனர். சிறுவீத மீன்பிடி துறையில் உள்ள 90 சதம் பேர் நேரடியாக மீன் பிடிக்கும் வேலையில் ஈடுபடுகின்றனர். உண்மையில், உணவுப் பாதுகாப்பையும் ஊட்டச்சத்துப் பாதுகாப்பையும் வேலை வாய்ப்பையும், அதற்கும் மேல், கரையோர மக்கள் சமூகத்தின் வாழ்வாதாரத்தைத் தாங்கிப் பிடிப்பதாகவும் இருக்கும் சிறுவீத மீன்பிடி துறை பொருளாதாரத்தையும், சமூகத்தையும் இழுத்துச் செல்லும் என்ஜினாக இயங்குகிறது.

சிறுவீத மீன்பிடிக்கான பொதுப்புரிதல் கோட்பாடுகளையும் வழிகாட்டுதல்களையும் அளிக்கும் சர்வதேசச் சட்டப் பத்திரமான SSF வழிகாட்டுதல்கள் நீண்ட நாள் தேவையாக இருந்து வந்தது. கடல் சட்டம் பற்றிய பொதுப்புரிதல் ஒப்பந்தத்தின் வாசகங்களுக்கு அக்கம் பக்கமாக மிக அதிகமான நாடுகளால் ஒப்புக்கொள்ளப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும் சர்வதேசச் சட்டப் பத்திரமான பொறுப்பார்ந்த மீன்பிடிக்கான நடத்தை விதிகளுக்கு வலுசேர்ப்பதாக SSF வழிகாட்டுதல்கள் அமைந்துள்ளன. அதுமட்டுமல்லாமல், வறுமை ஒழிப்புக்கும் உணவுப் பாதுகாப்புக்கும் பங்களிப்பு செய்வதுடன் நிலக்குத்தகை குறித்த பொறுப்பார்ந்த ஆளுகை பற்றிய தன்னார்வ வழிகாட்டுதல்கள் (Voluntary Guidelines on the Responsible Governance of Tenure of Land), தேசிய உணவுப் பாதுகாப்பு என்ற சூழலில் மீன் வளமும் காடுகளும் – குத்தகைக்கான வழிகாட்டுதல்கள் (Fisheries and Forests in the Context of National Food Security Tenure Guidelines) தேசிய உணவுப் பாதுகாப்பு என்ற சூழ்நிலையைக் கணக்கில் கொண்டு, போதுமான உணவுக்கான முன்னேறிச் செல்லும் உரிமைக்கான தன்னார்வ வழிகாட்டுதல்கள் – உணவு உரிமைக்கான வழிகாட்டுதல்கள் (Voluntary Guidelines to support the Progressive Realization of the Right to Adequate Food in the Context of National Food Security) விவசாயத்திலும் உணவு வழங்கல் கட்டமைப்பிலும் பொறுப்பார்ந்த கோட்பாடுகள் (Principles of Responsible Investment in Agriculture and Food Systems) போன்ற சம்பந்தப்பட்ட சர்வதேசச் சட்டப் பத்திரங்களுக்கும் பொருந்தி வருகின்ற பங்களிப்புகளைச் செய்துள்ளது. இந்தச் சட்டப் பத்திரங்கள் போலவே SSF வழிகாட்டுதல்களும் மனித உரிமையை யதார்த்தமாக்குவதற்கும் எளிதில் பாதிப்புக்கு ஆளாகக் கூடிய ஒதுக்கப்பட்ட பிரிவினர்களுக்குப் பணியாற்ற வேண்டியதின் தேவைக்கும் முன்னுரிமை அளிக்கிறது. மீன்வளம் குறித்த FAO கமிட்டியின் (FAO Committee on Fisheries - COFI) 29வது மற்றும் 30வது அமர்வுகள் அளித்த பரிந்துரைகளின் அடிப்படையில் கீழிருந்து மேல் நோக்கிய பங்கேற்பு வளர்ச்சி நிகழ்வுப் போக்கின் விளைவாக இந்த SSF வழிகாட்டுதல்கள் உருவாகின. 2010க்கும் 2013க்கும் இடைப்பட்ட காலத்தில் அரசுகள், சிறுவீத மீன்பிடியாளர்கள், மீனவ தொழிலாளர்களின் அமைப்புகள், ஆய்வாளர்கள், வளர்ச்சிப் பங்காளிகள் மற்றும் பொருத்தமான பிற உரிமை கோருபவர்களின் பிரதிநிதிகள் 4,000 பேர் கலந்துகொண்ட, 20க்கும் மேற்பட்ட சிவில் சொசைட்டி அமைப்புகள், 6 பிராந்தியங்களைச் சேர்ந்த 120 நாடுகளில் நடத்திய கலந்தாலோசனைக் கூட்டங்கள் என்ற உலகளாவிய நிகழ்வு போக்கு கட்டமைக்கப்பட்டது. இந்தக் கலந்தாலோசனைக் கூட்டங்களில் பெறப்பட்ட கருத்துகள் 2013 மே மற்றும் 2014 பிப்ரவரியில் நடைபெற்ற FAO தொழில்நுட்பக் கலந்தாலோசனைக்கான அடிப்படைத் தரவுகள் ஆகின. அதன் அடிப்படையில் இந்த வழிகாட்டுதல்களின் வாசகங்கள் இறுதி வடிவம் பெற்றன. வழிகாட்டுதல்களை ஜூன் 24 அன்று நடைபெற்ற COFIயின் 31 அமர்வு அங்கீகரித்தது, பாதுகாப்பான – நிலைத்தன்மையுள்ள சிறுவீத மீன்பிடிக்கான மாபெரும் சாதனை என்றே இதனைச் சொல்ல வேண்டும்.

FAOவின் புதிய செயல்முறை திட்ட வடிவில் குறிப்பிட்டிருப்பது போன்று பட்டினியை ஒழிப்பதற்கும் நிலைத்த வளர்ச்சியை மேம்படுத்துவதற்குமான தொலை நோக்குப் பார்வையில் நிறுவனத்துக்கு உதவுவதற்கான அடிப்படையான கருவியாக SSF

வழிகாட்டுதல்கள் அமைந்துள்ளன. அவை விவாதங்களையும், கொள்கை உருவாக்கும் நிகழ்வுப் போக்கையும், செயல்பாடுகளையும் அனைத்து மட்டங்களிலும் வழிநடத்தி, பட்டினியை ஒழிக்கவும் உணவுப் பாதுகாப்புக்குத் தன் பங்கை இந்தத் துறை ஆற்றுவதற்கும் உதவி செய்யும். FAO உறுப்பினர்களும் அனைத்துப் பங்காளிகளும் SSF வழிகாட்டுதல்களை நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதுதான் முன்னுள்ள ஒரே சவாலாகும்.

SSF வழிகாட்டுதல்களை நடைமுறைப்படுத்துவதற்கு ஆதரவு அளிப்பதென்பதில் FAO உறுதிகொண்டுள்ளது. அரசுகள், சிறுவீத மீன்பிடியாளர்கள், மீன் தொழிலாளர்கள் அவர்களின் அமைப்புகள், சிவில் சொசைட்டி அமைப்புகள் ஆய்வாளர்கள், கல்விச் சமூகத்தினர், தனியார் துறை, நன்கொடையாளர்கள் உட்பட அனைத்துத் தரப்பு உரிமை கோருபவர்களும் உணவுப் பாதுகாப்பு – பட்டினி ஒழிப்பு என்ற பாதையில் நிலைத்த தன்மையுள்ள சிறுவீத மீன்பிடியை நடத்திச் செல்வதற்குச் சேர்ந்து பணியாற்றுவதற்காக FAO காத்திருக்கிறது.

ஜோஸே காஷியானோ டியே ஷேல்வா<br>
(Jose Graziano da silva)<br>
FAO தலைமை இயக்குநர்

# உள்ளடக்கம்


சுருக்க வார்த்தைகளும் தலைப்பெழுத்து வார்த்தைகளும்
(Abbreviations and Acronyms) ........ viii

முன்னுரை ........ ix

## பகுதி 1:

## அறிமுகம் ........ 1

1. நோக்கங்கள் ........ 1
2. இயல்பும் செயல்பரப்பு எல்லைகளும் ........ 1
3. வழிகாட்டும் கோட்பாடுகள் ........ 2
4. இதர சர்வதேசச் சட்டப் பத்திரங்களுடனான (Instruments) உறவு ........ 4

## பகுதி 2:

## பொறுப்பார்த்த மீன்பிடியும் நிலைத்த வளர்ச்சியும் ........ 7

5. சிறுவீத மீன்பிடியில் அனுபவ உரிமை ஆளுகையும் வள ஆதார மேலாண்மையும் ........ 7
   5A. அனுபவ உரிமையைப் பொறுப்பார்ந்த முறையில் ஆளுகை செய்வது ........ 7
   5B. நிலைத்த வள ஆதார மேலாண்மை ........ 9
6. சமூக வளர்ச்சியும், வேலைவாய்ப்பும், கௌரவமான பணி நிலையும் ........ 10
7. மதிப்பு கூட்டும் சங்கிலி தொடர் நடவடிக்கைகள் மீன்பிடிக்குப் பிந்தைய நடவடிக்கைகளும் வணிகமும் ........ 13
8. பாலினச் சமத்துவம் ........ 14
9. பேரழிவு அபாயங்களும் பருவநிலை மாற்றமும் ........ 15

## பகுதி 3:

## ஆற்றல்மிகு சூழலை உறுதி செய்வதும் அமலாக்கத்திற்கு ஆதரவு தருவதும் ........ 19

10. கொள்கை ஒத்திசைவுகளும் நிறுவன ஒருங்கிணைப்பும் சேர்ந்து பணியாற்றுதலும் ........ 19
11. தகவல்களும் ஆய்வுகளும் செய்தித் தொடர்பும் ........ 20
12. திறன் மேம்பாடு ........ 22
13. அமலாக்கத்திற்கு ஆதரவு அளித்தலும் கண்காணித்தலும் ........ 22

# சுருக்க வார்த்தைகளும் தலைப்பெழுத்து வார்த்தைகளும்

## (Abbreviations and Acronyms)

### CCA
Climate change adaptation
பருவநிலை மாற்றத்திற்குத் தகவமைத்துக்கொள்ளல்

### CEDAW
Convention on the Eliminiation of All Forms of Discrimination against Women
பெண்களுக்கு எதிரான அனைத்து வடிவங்களிலான பாரபட்சங்களையும் ஒழிப்பதற்கான மாநாடு

### CSO
Civil society organization
சமூக அமைப்புகள்

### DRM
Disaster risk management
பேரழிவு அபாய நிர்வாகம்

### EAF
Ecosystem approach to fisheries
மீன்பிடிக்கான உயிர்ச்சூழல் அணுகுமுறை

### HIV/AIDS
Human immunodeficiency virus / acquired immunodeficiency syndrome
நோய்த்தடுப்பாற்றலைக் குறைக்கும் நுண்ணுயிர் தொற்று

### ICESCR
International Covenant on Economic, Social and Cultural Rights
பொருளாதார, சமூக, பண்பாட்டு உரிமைகளுக்கான சர்வதேச இணை உடன்படிக்கை

### IGO
Intergovernmental organization
பன்னாட்டு அரசு அமைப்பு

### ILO
International Labout Organization
சர்வதேசத் தொழிலாளர் அமைப்பு

### IMO
International Maritime Organization
சர்வதேசப் பெருங்கடல் நிறுவனம்

### IUU
Illegal, unreported and unregulated (fishing)
சட்ட விரோத, அறிவிக்கை செய்யப்படாத, கட்டுப்படுத்தப்படாத (மீன்பிடி)

### MCS
Monitoring, control and surveillance
கண்காணிப்பும் கட்டுப்பாடும் குற்றத் தவிர்ப்பு கண்காணிப்பும்

### NGO
Non-governmental organization
அரசுசாரா நிறுவனம்

### RIO+20
United Nations Conference on Sustainable Development (Rio+20)
நிலைத்தன்மை பற்றிய ஐக்கிய நாடுகள் சபையின் மாநாடு

### THE CODE
Code of Conduct for Responsible Fisheries (FAO)
பொறுப்பார்ந்த மீன்பிடி நடத்தை விதிகள் என்பது ‘நடத்தை விதிகள்’ என்பதாக இந்த நூலில் குறிப்பிடப்படுகிறது

### UN
United Nations
ஐக்கிய நாடுகள்

### UN DRIP
United Nations Declaration on the Rights of Indigenous Peoples
தொல்குடிகள்/பூர்வீகக் குடிகளின் உரிமைகள் குறித்த ஐக்கிய நாடுகள் பிரகடனம்

### UNFCCC
United Nations Framework Convention on Climate Change
பருவநிலை மாற்றம் குறித்த வரைமுறைகள் உருவாக்குவதற்கான ஐக்கிய நாடுகள் மாநாடு

### WTO
World Trade Organization
உலக வர்த்தக நிறுவனம்

# முன்னுரை:

இந்த உணவுப் பாதுகாப்பு மற்றும் வறுமை ஒழிப்பு என்ற பின்னணியில் நிலைத்தன்மையுள்ள சிறுவீத மீன்பிடியைப் பாதுகாப்பதற்கான தன்னார்வ வழிகாட்டுதல்கள் என்ற தொகுப்பு, 1995ஆம் ஆண்டு, ஐக்கிய நாடுகள் சபையின் உணவு விவசாய அமைப்பின் பொறுப்பார்ந்த மீன்வள நடத்தை விதித் தொகுப்புக்கு உதவியாக உருவாக்கப்பட்டதாகும். இனி இதனை நாம் நடத்தை விதி என்று குறிப்பிடுவோம். நடத்தை விதிகளின் கோட்டுபாடுகளுக்கும் வாசகங்களுக்கும் உதவுகின்ற வகையில் சிறுவீத மீன்பிடி துறைக்காக இந்த வழிகாட்டுதல்கள் உருவாக்கப்பட்டுள்ளன. சிறுவீத மீன்பிடியின் உண்மையான தோற்றம் தென்படும்படி இருத்தல், அதன் பாத்திரம் இனம் காணப்படுதல், அதனை மேம்படுத்துதல் ஆகியவற்றிற்கு உதவியாக இருப்பதையும் ஏற்கனவே முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கும் அதனை மேலும் முன்னேற்றுவதையும், தேசிய அளவிலும் சர்வதேச அளவிலும் பட்டினி–வறுமையை ஒழிக்க மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்குப் பங்காற்றுவதையும் இந்த வழிகாட்டுதல்கள் நோக்கமாகக் கொண்டுள்ளன. வாழும் மனிதர்களுக்கும், வருங்காலச் சமூகத்தினருக்கும் நிலைத்த தன்மையுள்ள சமூகப் பொருளாதார வளர்ச்சி அளிப்பதற்கும், பொறுப்பார்ந்த மீன் வளத்திற்கும் ஆதரவாக வழிகாட்டு நெறிமுறைகள் உள்ளன. மேலும், மனித உரிமையை அடிப்படையாகக் கொண்டுள்ளதாகவும் சிறுவீத மீனவர்கள், மீன் தொழிலாளர்களுக்கு, அவர்கள் தொடர்பான நடவடிக்கைகளுக்கு முக்கியத்துவம் அளிப்பதாகவும் வழிகாட்டு நெறிமுறைகள் அமைந்துள்ளன.

இந்த வழிகாட்டு நெறிமுறைகள், வளரும் நாடுகளின் தேவைகளை மனதில் கொண்டு, உலகக் கண்ணோட்டத்தில் உருவாக்கப்பட்டவை என்பதையும் தன்னார்வத்தினை அடிப்படையாகக் கொண்டவை என்பதையும் வலியுறுத்திச் சொல்லிக் கொள்கிறோம்.

சிறுவீத மீன்பிடியிலும். பாரம்பரிய மீன்பிடியிலும் ஈடுபட்டுள்ள ஆண்களும் பெண்களும் மேற்கொள்ளும், மீன்பிடிக்கு முந்தைய நடவடிக்கைகள், மீன்பிடி, அதற்குப் பிந்தைய நடவடிக்கைகள் என்ற அனைத்து மதிப்பு கூட்டும் (value addition) நடவடிக்கைகளும் உணவுப் பாதுகாப்பு, சத்துணவு, வறுமை ஒழிப்பு, சரிநிகர் வளர்ச்சி மற்றும் நிலைத்த வளர்ச்சிக்கு இணக்கமாக மீன் வள ஆதாரங்களைப்[1] பயன்படுத்துவதில் முக்கியமான பாத்திரம் கொண்டுள்ளன. உள்ளூர் அளவிலும், தேசிய, சர்வதேசச் சந்தைக்கும் சத்தான உணவை அளிப்பதுடன், உள்ளூர் பொருளாதாரத்திற்கும் தேசியப் பொருளாதாரத்திற்கும் சிறுவீத மீன்பிடி வருவாய் அளிக்கிறது.

உலக அளவில் பிடிக்கப்படும் மீனில் ஏறக்குறைய பாதி மீன்கள் சிறுவீத மீன்பிடியால் பிடிக்கப்படுகின்றன. மனிதர்களுக்கு நேரடியாக உணவாவது என்று பார்த்தால், சிறுவீத மீன்பிடியின் பங்கு மூன்றில் இரண்டு பங்காக அதிகரிக்கிறது. சிறுவீத மீன்பிடியில் கிடைக்கும் மீன்களின் பெரும்பகுதி நேரடியாக உணவாவது என்று வரும்போது குறிப்பாக உள்நாட்டு மீன்பிடி முக்கியத்துவம் வாய்ந்தது ஆகின்றது.

உலகில் மீன்பிடியில் ஈடுபட்டிருக்கும் மீனவர்கள் மற்றும் மீன் தொழிலாளர்களில் 90 சதம் பேர் சிறுவீத மீன்பிடியில் பணி செய்கிறார்கள். அவர்களின் ஏறக்குறைய பாதி பகுதியினர் பெண்கள். முழு நேர அல்லது பகுதி நேர மீனவர்கள்

[1] கடல்நீரிலும் நன்னீரிலும் வாழுகின்ற மற்றும் பிடிக்கப்படுகின்ற அனைத்து உயிரினங்களையும் இந்த ஆவணத்தில் நீர்வாழ் உயிரினங்கள் என்று குறிப்பிடுகிறோம்.

என்பதற்கும் கூடுதலாக, ஆண்டின் குறிப்பிட்ட காலத்தில் மீன்பிடியில் ஈடுபடுபவர்கள், அல்லது அவ்வப்போது மீன்பிடியில் ஈடுபடுபவர்கள், அல்லது மீன்பிடி தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் என்று பார்த்தால், மீன்பிடி பல பத்து லட்சம் பேருக்கான துணை வாழ்வாதாரமாக இருக்கிறது. அதுபோன்ற வாழ்வாதார நடவடிக்கைகள் தொடர்ச்சியான துணை பிழைப்பாகவும் இருக்கலாம், அல்லது சிரமமான காலத்தில் முக்கியமான ஒன்றாக மாறவும் செய்யலாம். சிறுவீத மீன்பிடியில் ஈடுபட்டுள்ள மீனவர்களும் மீன் தொழிலாளர்களும் சுய தொழில் செய்பவர்களாகவும், அவர்களின் குடும்பத்தினருக்கும் சமூகத்திற்கும் உணவளிப்பவர்களாகவும் அதே சமயம் வணிக மீன்பிடி, மீன் பதனிடும் தொழில் அத்துடன் சந்தைப்படுத்துதலில் ஈடுபடுபவர்களாகவும் இருக்கிறார்கள். கடற்கரைச் சமூகத்தினர், ஏரிக்கரை வாழ் மக்கள், நதிதீரச் சமூகம் என்று பலவகைப்பட்ட சமூகங்களின் பொருளாதார நடவடிக்கைகளின் அடிநாதமாகவும், அவற்றை இயக்கும் என்ஜினாகவும், பிற துறைகளில் பல்வேறு விளைவுகளை உருவாக்குவதாகவும் மீன்பிடியும் அது தொடர்பான நடவடிக்கைகளும் உள்ளன. சிறுவீத மீன்பிடி பன்முகத் தன்மைகொண்ட, துடிப்பான உட்பிரிவாக இருப்பதுடன், பருவகாலத்துக்கு ஏற்ப புலம்பெயர்தல் நடப்பதாகவும் உள்ளது. இந்த உட்பிரிவின் தன்மை இடத்திற்கேற்ற குணாம்சம் கொண்டதாக இருக்கிறது. உள்ளூர் சமூகத்தில் ஆழமான வேர் கொண்டதாகவும், அருகாமையில் உள்ள மீன்வள ஆதாரங்களுடனும், மரபுடனும் மதிப்பீடுகளுடனும் வரலாறு ரீதியான தொடர்புகொண்டதாகவும் சமூக ஒத்திசைவுக்கு ஆதரவானதாகவும் சிறுவீத மீன்பிடி இருக்கிறது. சிறுவீத மீன்பிடி மீனவர்களுக்கும் தொழிலாளர்களுக்கும் அது வாழ்க்கை முறையாக இருக்கிறது. உலக முக்கியத்துவம் வாய்ந்த பன்முகப்பட்ட பண்பாட்டுச் செழுமை கொண்டதாகவும் இருக்கிறது. எளிதில் பாதிப்புக்கு ஆளாகக்கூடிய ஒதுக்கப்பட்ட சமூகப் பிரிவினர் உட்பட, சிறுவீத மீன்பிடியில் ஈடுபட்டுள்ள சமூகங்கள் மீன்வள ஆதாரங்களையும் நிலத்தையும் நேரடியாகச் சார்ந்துள்ளார்கள். கடற்கரை அல்லது நீர்த்துறையை அணுகுவதற்காவும், மீன் பதனிடுதல், விற்பனை போன்ற துணை நடவடிக்கைகளுக்காகவும் மேலும், வீட்டு வசதிக்காவும் வாழ்வாதாரத்திற்காகவும் நிலத்தின் மீதான உரிமை மிக முக்கியமானதாக இருக்கிறது. மீன்வளத்துறை அனைவருக்குமான நல்வாழ்க்கையை அளிக்க வேண்டும் என்றால், நீர் மண்டல உயிரிச்சூழலின் ஆரோக்கியமும் பல்லுயிர்ச்சூழலும் அடிப்படை முக்கியத்துவம் வாய்ந்தவை ஆகின்றன.

சிறுவீத மீன்பிடி முக்கியத்துவம் வாய்ந்தது என்றாலும் கூட அதில் ஈடுபட்டிருக்கும் சமூகம் ஒதுக்கப்பட்டவர்களாக நீடிப்பது இன்னமும் தொடர்கிறது. அதன் காரணமாகச் சிறுவீத மீன்பிடி உணவுப் பாதுகாப்புக்கும் சத்துணவுக்கும் அளிக்கும் பங்களிப்பையும், வறுமை ஒழிப்பு, சரிநிகர் வளர்ச்சி, மற்றவர்களுக்கும் மீனவர்களுக்கும் பயனாகுவதையும் நிலைத்த வள ஆதாரப் பயன்பாடு போன்றவை முழுமையாகப் பயன்படுத்தப்படுவதும் சாத்தியமற்றதாகப் போகும் நிலை நீடிக்கிறது.

சிறுவீத மீன்பிடியின் பங்களிப்பை உறுதி செய்வதிலும், அதிகப்படுத்துவதிலும் பல்வேறு சவால்களும் தடைகளும் ஏற்படுகின்றன. கடந்த முப்பது அல்லது நாற்பது ஆண்டுகளில் மீன்வளத்துறையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் வள ஆதாரங்கள் மிகையாகச் சுரண்டப்படுவதற்கும் வாழிடங்கள் – உயிரிச்சூழல் அழிக்கப்படுவதற்கும் காரணங்களாகின. மையப்படுத்தப்பட்ட மீன்வள நிர்வாக முறைகளாலும், பங்கேற்பு முறை அழிந்து போனதாலும், மக்கள் தொகையால் ஏற்பட்ட மாற்றங்களின் காரணமாகவும் பற்பலத்தலைமுறைகளாகச் சிறுவீத மீன்பிடியில் நடைமுறையில் இருந்துவந்த பாரம்பரியப் பழக்கமான ஒதுக்கீடு – பங்கு பிரிப்பு முறை மாற்றம் கண்டுவிட்டது. சமத்துவமற்ற அதிகார உறவு நிலையின் காரணமாகவும் சிறுவீத மீன்பிடி சமூகம் பாதிப்புக்கு ஆளாகிறது. பல இடங்களில் பெருவீத மீன்பிடி தொழில் செய்பவர்களுக்கும் சிறுவீத மீன்பிடி தொழில் செய்பவர்களுக்கும் இடையிலான மோதல் பெரும் பிரச்சனையாக இருக்கிறது. சம்பந்தப்பட்ட பிற துறைகளுக்கும் சிறுவீத மீன்பிடி துறைக்கும் இடையில் ஒன்றையொன்று சார்ந்திருப்பதும், போட்டியிட்டுக் கொள்வதும் சாதாரணமாகக் காணப்படுகிறது. இப்படியான பிற துறைகள் வலுவான அரசியல் – பொருளாதாரச் செல்வாக்கு கொண்டவையாக இருக்கின்றன. அந்த பிற துறைகளில், சுற்றுலா, நீருயிர் வளர்ப்பு, மின் சக்தி உற்பத்தி, சுரங்கம், தொழிற்சாலைகள், அடிக்கட்டுமான வசதி உள்ளிட்ட தொழில்துறைகள் அடக்கம்.

சிறுவீத மீன்பிடியில் வறுமை நிலவும்போது அது

பன்முகத்தன்மை கொண்டதாக இருக்கிறது. வறுமைக்குக் காரணம் குறைவான வருமானம் மட்டும் இல்லை. சமூக, அரசியல், பொருளாதார, குடிமை, மற்றும் பண்பாட்டு உடமைகளை அனுபவிப்பதற்குத் தடையாக இருக்கும் நிலைமைகளும் வறிய நிலைக்கான காரணங்களாக இருக்கின்றன. சிறுவீத மீன்பிடி சமூகத்தினர் சாதாரணமாகத் தொலைதூரப் பகுதிகளில் வாழ்பவர்களாக இருக்கின்றனர். அதன் காரணமாக, மீனுற்பத்திப் பொருட்களைச் சந்தைக்கு எடுத்துச் செல்வது எளிதானதாக இல்லை. அதுமட்டுமல்லாமல், கல்வி, மருத்துவம் அத்துடன் மற்றப் பிற சேவைகள் கிடைப்பதும் அவர்களுக்குக் கடினமானதாக இருக்கிறது. குறைவான கல்வி, நோயுற்ற நிலை (சில சமயம் எச்ஐவி தொற்று சராசரியைவிட அதிகமானதாக இருக்கிறது) அத்துடன் பற்றாக்குறையான அமைப்புகள் என்பதே அவர்களின் சமூக நிலைமையாக இருக்கிறது. சிறுவீத மீன்பிடியில் உள்ள சமூகங்கள் மாற்று வாழ்வாதாரமின்மை, இளைஞர்களுக்கு வேலையின்மை, ஆரோக்கியமற்ற – பாதுகாப்பற்ற வேலை நிலைமைகள், கட்டாய உழைப்பு, குழந்தைகள் உழைக்க வேண்டிய நிலை, போன்ற பிரச்சனைகளை எதிர்கொள்வதால், அவர்களுக்குக் கிடைக்கும் வாய்ப்புகள் மிகக் குறைவானவையாக இருக்கின்றன. மாசுபாடு, சுற்றுச்சூழல் சீரழிவு, பருவநிலை மாற்றதின் தாக்கம், மனிதர்களாலும் இயற்கையாலும் ஏற்படும் பேரழிவு போன்றவை சிறுவீத மீன்பிடியாளர்கள் எதிர்கொள்ளும் கூடுதல் ஆபத்துகளாகும். இந்த அனைத்துக் காரணிகளும் சேர்ந்துகொண்டு சிறுவீத மீன்பிடியாளர்களின் குரல் செவிமடுக்கப்படாமல் போகவும், அவர்கள் சார்ந்துள்ள மீன்வள ஆதாரங்களை நிலைத்த வகையில் பயன்படுத்த முடியாது போகவும் காரணமாகின்றன.

சிறுவீத மீன்பிடியாளர்களின் பிரதிநிதிகள், சமூக அமைப்புகள், அரசுகள், பிராந்திய அமைப்புகள் மற்றும் பிற பங்குதாரர்களின் பங்கேற்புடனும், கலந்தாலோசனையுடனும் இந்த வழிகாட்டு விதிமுறைகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. 20–24 மே 2013 மற்றும் 3–7 பிப்ரவரி 2014ல் நடைபெற்ற உணவு மற்றும் விவசாய அமைப்பின் தொழில்நுட்பக் கலந்தாலோசனை இந்த வழிகாட்டு விதிமுறைகளைப் பரிசீலனை செய்தது. சமத்துவம் – பாரபட்சமின்மை, பங்கேற்பு – அனைவரையும் அரவணைத்துச் செல்வது, பொறுப்பேற்புடமை – சட்டத்தின் ஆட்சி, “அனைத்து மனித உரிமைகளும் பிரித்துப் பார்க்க முடியாதவை, ஒன்றுக்கொன்று தொடர்புடையவை, ஒன்றையொன்று சார்ந்தவை” என்ற கோட்பாடு உள்ளிட்ட பரந்துபட்ட கோட்பாடுகள் கருத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டன. சர்வதேச மனித உரிமைகளை மேம்படுத்தும் போக்குடன் ஒத்துப்போவதாக இந்த வழிகாட்டு நெறிமுறைகள் உள்ளன. பொறுப்பார்ந்த மீன்வள நடத்தை விதிகளுடனும் அது தொடர்பான சர்வதேசச்சட்டப் பத்திரங்களின் விதிகளுடனும் இணைந்து அவற்றை முழுமையாக்க வல்லவையாக இந்த வழிகாட்டு நெறிமுறைகள் உள்ளன. பொறுப்பார்ந்த மீன்வள நடத்தை விதிகளுடன் தொடர்புடைய வறுமை ஒழிப்பிற்காகவும் உணவுப் பாதுகாப்புக்காவும் சிறுவீத மீன்பிடியின் பங்கை அதிகரித்தல் என்ற பொறுப்பார்ந்த மீன் வளத்திற்கான தொழில்நுட்ப வழிகாட்டுதல் 10 போன்றவற்றையும் வழிகாட்டும் நெறிமுறைகள் கருத்தில் எடுத்துக்கொண்டுள்ளன. அதுமட்டுமல்லாமல், வறுமை ஒழிப்புக்கும் உணவுப் பாதுகாப்புக்கும் பங்களிப்பு செய்வதுடன் நில உரிமை குறித்த பொறுப்பார்ந்த ஆளுகை பற்றிய தன்னார்வ வழிகாட்டுதல்கள் (Voluntary Guidelines on the Responsible Governance of Tenure of Land), தேசிய உணவுப் பாதுகாப்பு என்ற சூழலில் மீன் வளமும் காடுகளும் – உரிமைக்கான வழிகாட்டுதல்கள் (Fisheries and Forests in the Context of National Food Security - Tenure Guidelines) தேசிய உணவுப் பாதுகாப்பு என்ற சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, போதுமான உணவுக்கான முன்னேறிச் செல்லும் உரிமைக்கான தன்னார்வ வழிகாட்டுதல்கள் – உணவு உரிமைக்கான வழிகாட்டுதல்கள் (Voluntary Guidelines to support the Progressive Realization of the Right to Adequate Food in the Context of National Food Security - Right to Food Guidelines) போன்ற சம்பந்தப்பட்ட சர்வதேசச்சட்டப் பத்திரங்களுக்கும் பொருந்திவருகின்ற பங்களிப்புகளைச் செய்துள்ளது. இந்தப் பிற வழிகாட்டுநெறிமுறைகளில் உள்ளவற்றைக் கருத்தில் எடுத்துக்கொள்ளுமாறும், அதுபோல, பொருந்திப்போகின்ற கட்டுப்பாடுகளையும் பொறுப்புகளையும் வழிகாட்டு நெறிமுறைகளையும் ஒருங்கிணைப்பதற்கு, இதர பொருத்தமான சர்வதேச அல்லது பிராந்தியச் சட்டங்களையும் பரிசீலிக்குமாறு அரசுகளையும் சம்பந்தப்பட்ட மற்றவர்களையும் / இதர பிரிவினரையும் கேட்டுக்கொள்கிறோம்.

# பகுதி 1:
# அறிமுகம்

## 1. நோக்கங்கள்

**1.1** இந்த வழிகாட்டு நெறிமுறைகளின் நோக்கம் பின்வருமாறு:

a) உலக உணவுப் பாதுகாப்புக்கும் சத்துணவுக்கும் சிறுவீத மீன்பிடி ஆற்றும் பங்கை மேம்படுத்துவது அத்துடன், போதுமான உணவுக்கான உரிமையை முன்னேறி வளர்ந்து செல்லும் வகையில் ஆதரிப்பது.

b) சரிநிகரான வகையில் சிறுவீத மீன்பிடி சமூகங்கள் வளர்ச்சி காண்பதற்கும் வறுமை ஒழிப்புக்கும், அத்துடன், நிலைத்த மீன் வள மேலாண்மை என்ற சூழ்நிலையைக் கருத்தில்கொண்டு, மீனவர்கள் மற்றும் மீன் தொழிலாளர்களின் சமூகப் பொருளாதார முன்னேற்றத்திற்கும் பங்காற்றுவது

c) பொறுப்பார்ந்த மீன்வள நடத்தை விதிகள் மற்றும் பிற சட்டங்களுக்குப் பொருந்திப்போகும் வகையில் நிலைத்த வகையிலாள பயன்பாடு, புத்திசாலித்தனமானதும் பொறுப்புடையதுமான மேலாண்மை அத்துடன் மீன்வள ஆதாரங்களைப் பேணுதலை எட்டுவது

d) நமது பூமிக்கும் அதன் மக்களுக்கும் சமூக ரீதியாகவும் சுற்றுச் சூழல் ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் நிலைத்தன்மையுள்ள எதிர்காலத்தை வழங்கும் வகையில் சிறுவீத மீன்பிடியின் பங்களிப்பை மேம்படச் செய்தல்.

e) உயிர் சூழல் நேயமுள்ளவையும் பொறுப்பார்ந்ததும் நிலைத்தன்மை கொண்டதுமான சிறுவீத மீன்பிடிக்கான பங்கேற்பு கொள்கையையும், செயல் முறைகளையும், சட்ட அடிப்படைகளையும் வளர்த்தெடுக்கும் வகையில், அரசுகளும் பங்குதாரர்களும் கருத்தில் கொள்வதற்கான வழிகாட்டு நெறிமுறைகளை அளிப்பது

f) சிறுவீத மீன்பிடியின் கலாச்சாரம், பாத்திரம், பங்களிப்பு உள்ளாற்றல் பற்றி பொதுமக்கள் அறிந்திருப்பதை முன்னேற்றுதல் விழிப்புணர்வு அளித்தல், இத்துறையின் முன்னோர்கள் மற்றும் பாரம்பரிய அறிவு அவற்றுடன் தொடர்புடைய தடைகள் மற்றும் வாய்ப்புகளைக் கருத்தில் கொள்ளுதல்

**1.2** சிறுவீத மீன்பிடியைச் சேர்ந்த ஆண்களையும் பெண்களையும் ஆற்றலுள்ளவர்களாக மாற்றுவது, அவர்கள் முடிவெடுக்கும் நிகழ்வுப் போக்கில் பங்கெடுக்க வைப்பது, மீன் வள ஆதாரங்களை நிலைத்த வகையில் பயன்படுத்துவதற்கான பொறுப்புகளை ஏற்க வைப்பது, வளரும் நாடுகளின் தேவைகளை வலியுறுத்துவது, பாதிப்புக்கு ஆளாகக் கூடிய, ஒதுக்கப்பட்ட பிரிவினரின் நலனை முன்னிறுத்துவது ஆகியவற்றின் மூலம் மனித உரிமைகளை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறையைப் பயன்படுத்தி இந்த நோக்கங்கள் எட்டப்பட வேண்டும்

## 2 இயல்பும் அமலாக்கப் பரப்பும்

**2.1** இந்த வழிகாட்டு நெறிமுறைகள் தன்னார்வத்தின் அடிப்படையில், உலகம் முழுவதும், வளரும் நாடுகளின் தேவைகளுக்குப் பொருந்தும் வகையில் அமலாக்கம் செய்யப்பட வேண்டும்.

**2.2** கடலில் மீன்பிடிப்பவர்களுக்கும், உள்நாட்டு மீன்பிடியில் ஈடுபடுபவர்களுக்கும் இந்த வழிகாட்டு நெறிமுறைகள் பொருந்தும். அதாவது, மீன்பிடி, மீன்பிடிக்கும் முந்தைய மற்றும் பிந்தைய நடவடிக்கைகள் என்று இந்தத் தொழிலில் உள்ள நடவடிக்கைகள் அனைத்திலும் ஈடுபடும் ஆண்கள் – பெண்கள் அனைவருக்கும் இந்த வழிகாட்டு நெறிமுறைகள் பொருந்தும். சிறுவீத மீன்பிடிக்கும் நீருயிர் வளர்ப்புக்கும் இடையிலான முக்கியத்துவம் வாய்ந்த தொடர்பு கவனத்தில் கொள்ளப்பட்ட போதும், இந்த வழிகாட்டு நெறிமுறைகள் மீன்பிடியின் மீதுதான் கவனம் குவித்துள்ளன.

**2.3** ஒரு நாடு, அதுபோலத் துணைப் பிராந்தியம், பிராந்தியம், சர்வதேசம், பன்னாட்டு அரசு அமைப்புகள் (intergovernmental organizations - IGOs), மீனவர்கள், மீன் தொழிலாளர்கள், அவர்களின் சமூகம், பாரம்பரிய மற்றும்

நடைமுறை வழக்கத்தின் பேரிலான அதிகார அமைப்புகள், தொடர்புள்ள தொழில் முறை அமைப்புகள், சமூகச் சேவை அமைப்புகள் என உணவு – விவசாய அமைப்பின் உறுப்பு நாடுகள் மற்றும் உறுப்பினரல்லாத நாடுகளை இலக்காகக் கொண்டு இந்த வழிகாட்டு நெறிமுறைகள் உருவாக்கப்பட்டுள்ளன. மேலும் ஆய்வு – கல்வி நிறுவனங்கள், தனியார் துறை, அரசு சாரா அமைப்புகள், மேலும், மீன்வளத்துறை, கடற்கரை மற்றும் கிராமப்புர வளர்ச்சிகள், அத்துடன் நீர்சார் சூழலைப் பயன்படுத்தும் துறைகள் போன்ற இதர பங்குதாரர்களையும் இந்த வழிகாட்டு நெறிமுறைகள் இலக்காகக் கொண்டுள்ளன.

2.4 சிறுவீத மீன்பிடியின் மிகப் பரந்துபட்ட பன்முகத் தன்மையையும், இந்தத் துணைத் தொழிலுக்கான அனைவரும் ஒப்புக்கொள்ளுகின்றதொரு வரையறை இல்லை என்பதையும் இந்த வழிகாட்டு நெறிமுறைகள் ஒப்புக்கொள்கின்றன. எனவே, சிறுவீத மீன்பிடி பற்றிய தரப்படுத்தப்பட்ட வரையறை ஒன்று இது அளிக்கவில்லை என்பது மட்டுமல்லாமல், ஒரு நாட்டில் இது எவ்வாறு நடைமுறைப்படுத்தப்படவேண்டும் என்பதற்கான வழிமுறைகளையும் வகுத்தளிக்கவில்லை. பிழைப்பிற்கான சிறுவீத மீன்பிடிக்கும் எளிதில் பாதிப்புக்குள்ளாக வாய்ப்புகள் மீனவ மக்களுக்கும் இவை விசேஷமான முறையில் பொறுத்தபாடு உள்ளவை. இந்த வழிகாட்டு நெறிமுறைகளை நடைமுறைப்படுத்தும்போது, வெளிப்படைத் தன்மையும் பொறுப்பேற்பும் இருப்பதை உறுதி செய்வதற்காக எந்தச் செயல்பாடுகள், எவ்வகைச் செயல்பாட்டாளர்கள் சிறு வீத மீன்பிடியைச் சேர்ந்தவை என்பதையும் அத்துடன் கூடுதல் கவனம் கோருகின்ற, பாதிப்புக்குள்ளாகக் கூடிய பிரிவினர் எவர் என்பதையும் உறுதி செய்துகொள்வது அத்யாவசியமானதாகும். இந்த நெறிமுறைகள் எந்தச் சூழலில் அமல்படுத்தப்பட வேண்டுமோ, அதற்குத்தக பிராந்திய, துணைப் பிராந்திய அல்லது தேசிய அளவில் அமலாக்கம் மேற்கொள்ளப்பட வேண்டும். இதுபோன்று அமலாக்கப் பரப்பு இனம் காணப்படுவது, அமலாக்கம் ஆகியவற்றைத் தீர்மானிப்பதற்காக ஆண்களும் பெண்களும் கலந்துகொண்டு தங்கள் கருத்துகளைப் பதிவு செய்யும் வகையில் அர்த்தமுள்ள, தனித்துவம்மிக்க கலந்தாலோசனைகள் பல்வேறு மட்டங்களில், பங்கேற்பு முறையில், கலந்தாலோசனை அடிப்படையில், நோக்கத்தை எட்டும் வகையில் நடத்தப்படுவதை அரசுகள் உத்திரவாதம் செய்ய வேண்டும். பொருத்தமான அனைத்துத் தரப்பினரும் அதுபோன்ற நிகழ்வுகளில் பங்கெடுத்துக்கொள்ளவும் ஆதரவாகச் செயல்படவும் வேண்டும்.

2.5 தேசியச்சட்டக் கட்டமைப்பு மற்றும் நிறுவனங்களுக்கு ஏற்ற வகையில் இந்த வழிகாட்டு நெறிமுறைகளுக்கு விளக்கவுரை அளிக்கப்படவும் அமலாக்கப்படவும் வேண்டும்.

## 3. வழிகாட்டும் கோட்டுபாடுகள்
(GUIDING PRINCIPLES)

3.1 எளிதில் பாதிப்புக்கு ஆளாகக் கூடிய பிரிவினருக்கும் ஒதுக்கப்பட்ட பிரிவினருக்கும் சிறப்புக் குறிப்பான கவனம் செலுத்தும் வகையிலும், போதுமான உணவுக்கான உரிமையைத் தொடர்ந்து முன்னேற்றும் வகையில் ஆதரிப்பதாகவும், சர்வதேச மனித உரிமை தரநிர்ணயங்கள், பொறுப்பார்ந்த மீன்பிடி தர நிர்ணயங்கள் மற்றும் நடைமுறைகள், நிலைத்த வளர்ச்சி குறித்த ஐக்கிய நாடுகள் மாநாட்டின் (Rio+20) ஆவணங்கள், பொறுப்பார்ந்த மீன்பிடி நடத்தை விதிகள் மற்றும் இதர பொருத்தமான சட்டங்கள் ஆகியவற்றை இந்த வழிகாட்டு நெறிமுறைகள் அடிப்படையாகக் கொண்டுள்ளன.

### 1. மனித உரிமைகள் மற்றும் கௌரவம்:

அனைத்துத் தரப்பினரும், தனிநபர்களின் உள்ளார்ந்த கௌரவத்தையும் சமத்துவமானதும் பிரித்துப் பார்க்கப்பட முடியாததுமான மனித உரிமைகளை அங்கீகரித்து, மரியாதை செய்து மேம்படுத்துவதுடன், சிறுவீத மீன்பிடியில் ஈடுபட்டிருக்கும் சமூகங்களுக்கு அக்கோட்பாடுகள் சர்வதேச மனித உரிமை தர நிர்ணயங்களில் கண்டுள்ளவாறு பொருத்தப்படுவதை உறுதி செய்திடவேண்டும்: அனைத்தையும் உள்ளடக்கிய தன்மையும், விட்டுக்கொடுக்க முடியாத தன்மையும்; பிளக்க முடியாத தன்மை; ஒன்றையொன்று சார்ந்த மற்றும் ஒன்றுடன் ஒன்று உறவு கொண்ட தன்மை; பாரபட்சமின்மை மற்றும் சமத்துவம்; பங்கேற்பும் உள்ளடக்கிக் கொள்ளுதலும்; பொறுப்பேற்புடமையுடம் சட்டத்தின் ஆட்சியும். சிறுவீத மீன்பிடி தொடர்பான மனித உரிமை காப்புப் போராளிகளின் உரிமைகளை அரசுகள் மதிக்க வேண்டும்.

சிறுவீத மீன்பிடியைப் பாதிக்கக் கூடிய அல்லது அத்துடன் தொடர்புள்ள தொழில் நிறுவனங்கள் உட்பட அனைத்து அரசு அல்லாத அமைப்புகளும் மனித உரிமைகளை மதிக்கவும் அவற்றுக்குப் பொறுப்புள்ளவர்களாகவும் இருக்க வேண்டும். அரசு அல்லாத அமைப்பினர் சிறுவீத மீன்பிடியுடன் உறவாடும்போது, சர்வதேச மனித உரிமை தர நிர்ணயங்களுக்குக் கீழ்ப்பட்டு அவர்கள் செயல்படுவதை உறுதி செய்யும் வகையில் அவர்களின் நடவடிக்கைகளை அரசு கட்டுப்படுத்த வேண்டும்.

## 2. கலாச்சாரங்களை மதித்தல்:

தொல் முதல் குடிகள், சிறுபான்மை இனத்தவர்கள் உள்ளிட்ட, சிறுவீத மீன்பிடி சமூகங்களின் தற்போதைய அமைப்புகளையும், பாரம்பரிய மற்றும் உள்ளூர் அறிவையும்–நடைமுறைகளையும் அங்கீகரிக்கவும் மதிக்கவும் வேண்டும். மேலும், பெண்களுக்கு எதிரான அனைத்து வடிவங்களிலான பாரபட்சங்களையும் ஒழித்தல் மாநாடு (Convention on the Elimination of All Forms of Discrimination Against Women - CEDAW) வாசகம் 5ஐ கருத்தில் எடுத்துக்கொண்டு பெண்கள் தலைமை ஏற்பதை ஊக்குவிக்க வேண்டும்.

## 3. பாரபட்சமின்மை (Non-discrimination):

கொள்கைகளிலும் நடைமுறையிலும் உள்ள சிறுவீத மீன்பிடிப்புக்கு எதிரான அனைத்து வகை பாரபட்சங்களையும் அகற்றும் நடவடிக்கைகளை மேம்படுத்துதல்.

## 4. பாலின சமத்துவமும் சரிநிகர் நிலையும் (Gender equality and equity):

பாலின சமத்துவமும் சரிநிகர் நிலையும் எந்த வளர்ச்சிக்கும் அடிப்படையானவை ஆகும். சிறுவீத மீன்பிடியில் பெண்கள் ஆற்றும் ஜீவாதாரமான பாத்திரத்தை ஏற்றுக்கொண்டு, அவர்களுக்குச் சம உரிமைகளும் வாய்ப்புகளும் வழங்கப்பட வேண்டும்.

## 5. சரிநிகர் நிலையும் சமத்துவமும் (Equity and equality):

அனைத்து மனித உரிமைகளையும் அனுபவிக்கும் உரிமை உட்பட, சட்டப்படியும் நடைமுறையிலும் நியாயத்தையும் முறையாக நடத்தப்படுவதையும் மேம்படுத்துதல். அதேசயம், ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையிலான வேறுபாட்டை அங்கீகரித்து, நடைமுறையில் உள்ள சமத்துவத்தை விரைவுபடுத்துவதற்கான குறிப்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட ண்டேும். அதாவது, சரிநிகர் நிலையை எட்டுவதற்கு (பெண்களுக்கு) சாதகமான முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். குறிப்பாக எளிதில் பாதிப்புக்கு ஆளாகக்கூடியவர்களுக்கும் ஒதுக்கப்பட்ட குழுக்களுக்கும் முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.

## 6. கலந்தாலோசனையும் பங்கேற்பும் (Consultation and participation):

மீன்வள ஆதாரங்கள், சிறுவீத மீன்பிடி நடக்கும் இடங்கள், அவற்றுடன், அவற்றின் அருகே உள்ள நிலப்பரப்புகள் ஆகியவற்றைப் பற்றி முடிவெடுக்கும் நிகழ்வுப் போக்கில், பல்வேறு தரப்பினருக்கு இடையில் நிலவும் அதிகார வேறுபாடுகளைக் கருத்தில் கொண்டு, தொல் முதல் குடிகளின் உரிமைகள் குறித்த ஐக்கிய நாடுகள் பிரகடனத்தின்படி (UN Declaration on the Rights of Indigenous Peoples - UN DRIP) தொல் முதல் குடிகளையும் உள்ளடக்கிய சிறுவீத மீன்பிடி சமூகங்கள் துடிப்புடன், சுதந்திரமாகப் பலன் தரும் வகையில், பொருளுள்ள வகையில் தகவல் அறிந்து பங்கெடுப்பதை உறுதி செய்ய வேண்டும். இந்த நடவடிக்கையில் பாதிப்புக்கு ஆளாக வாய்ப்புள்ளவர்களின் கருத்துரைகளும் ஆதரவும், முடிவெடுப்பதற்கு முன்னமே பெறப்படுவதும், அவர்களின் கருத்துரைக்குப் பதிலளிப்பதும் உள்ளடங்கியதாகும்.

## 7. சட்டத்தின் ஆட்சி:

சிறுவீத மீன்பிடி தொடர்பான, பொருத்தமான மொழிகளில் பரவலாகப் பிரசுரிக்கப்பட்ட, அனைவருக்கும் பொருந்துகிற, சமத்துவம்மிக்க வகையில் நடைமுறைப்படுத்தப்படுகிற, சுதந்திரமான முறையில் நீதி பரிபாலனம் செய்யப்படுகின்ற, தற்போதிருக்கும் தேசிய மற்றும் சர்வதேசப் பொது ஒப்பந்தங்களுடன் பொருந்திப்போகின்ற, மேலும், பிராந்திய – சர்வதேசத் தன்னார்வ விதிகளுக்கு மதிப்பளிக்கிற சட்டங்களின் படியிலான ஆளுகை மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 8. வெளிப்படைத் தன்மை:

மிகத் தெளிவான வரையறைகளுடன் கூடிய, பரவலாகப் பிரசுரிக்கப்படுகின்ற, தொடர்புடைய மக்களின் மொழியில் உள்ள சட்டங்கள் மற்றும் நடைமுறைகள் மற்றும் அவற்றுக்கான படிவங்கள் இருக்க வேண்டும். அவை அனைத்து மக்களுக்கும் சென்று சேரவேண்டும்.

## 9. பொறுப்பேற்புடமை (Accountability) :

சட்டத்தின் ஆட்சி என்ற கோட்பாட்டுக்கு இணங்க, அனைத்துத் தனி நபர்களும், பொது முகமைகளும், அரசு அல்லாத நிறுவனங்களும் பொறுப்பேற்புடமை உள்ளவர்களாக ஆக்கவேண்டும்.

## 10. பொருளாதார, சமூக, சுற்றுச்சூழல் நிலைத்தன்மை (Economic, social and environmental sustainability):

மீன் வள ஆதாரங்கள் மிகையாகச் சுரண்டப்படுதல், பாதகமான சுற்றுச்சூழல், சமூகப் பொருளாதாரத் தாக்கங்கள் உட்பட விரும்பத்தகாத விளைவுகளுக்கு எதிரான பாதுகாப்பை வழங்கக்கூடிய முன்னெச்சரிக்கை

நடவடிக்கைகளையும் ஆபத்து மேலாண்மை நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுதல்

### 11. ஒருமுகப்படுத்தப்பட்டதும் ஒருங்கிணைந்ததுமான அணுகுமுறைகள்
(Holistic and integrated approaches):

உயிர்ச்சூழலின் அனைத்துப் பகுதிகளையும் ஒருங்கிணைந்தவையாகவும், அவை ஒவ்வொன்றின் நிலைத்தன்மையையும் கவனத்தில் கொள்வது, அவற்றுடன் சிறுவீத மீன்பிடி சமூகத்தின் வாழ்வாதாரத்தையும் ஒன்றாகப் பார்ப்பது, சிறுவீத மீன்பிடி பல்வேறு இதர பிரிவுகளுடனும் நெருக்கமாகப் பிணைக்கப்பட்டிருப்பதால் அப்பிரிவுகளுக்கிடையில் ஒருங்கிணைப்பைக் கொண்டுவருவது என்பதற்காக உயிர்ச்சூழல் அணுகுமுறையை மேற்கொள்வது மீன் வளத்திற்கு மிக முக்கியமானது என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

### 12. சமூகப் பொறுப்பு:

சமூக ஒருமைப்பாட்டினையும் தொழில் நிறுவனப் பொறுப்பேற்பினையும் மேம்படுத்துவது, அத்துடன் சம்பந்தப்பட்ட அனைவரின் கூட்டுச் செயல்பாட்டை ஊக்குவிப்பது.

### 13. சாத்தியப்பாடும் சமூகப் பொருளாதார வாய்ப்பு நிலையும் (Feasibility and social and economic viability) :

சிறுவீத மீன்பிடி ஆளுகையையும் வளர்ச்சியையும் மேம்படுத்துவதற்கான கொள்கைகள், செயல்முறைகள், திட்டங்கள் மற்றும் நடவடிக்கைகள் சமூக ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் வலுவானவையாகவும் காரண காரியங்கள் கொண்டவையாகவும் இருப்பதை உறுதி செய்வது. அவை நிலவும் சூழலைக் கணக்கிலெடுத்துக் கொண்டவையாகவும் நடைமுறைப்படுத்தக் கூடியவையாகவும் மாறுகின்ற நிலைமைக்கு ஈடுகொடுக்கக் கூடியவையாகவும் சமூகத்தின் தாக்குப்பிடிக்கும் திறனை ஆதரிப்பவையாகவும் இருக்க வேண்டும்.

## 4. இதர சர்வதேசச் சட்டப் பத்திரங்களுடன் உறவு
(RELATIONSHIP WITH OTHER INTERNATIONAL INSTRUMENTS)

4.1 தேசிய மற்றும் சர்வதேசச் சட்டங்களின் படி தற்போதிருக்கும் உரிமைகள் மற்றும் கடப்பாடுகளுக்குப் பொருந்திப்போகும் வகையிலும், பொருத்தமான பிராந்திய மற்றும் சர்வதேசச்சட்டப் பத்திரங்களுக்குப் பொருத்தமான மதிப்பளிக்கும் வகையிலும் இந்த வழிகாட்டு நெறிமுறைகள் விளக்கவுரை அளிக்கப்பட வேண்டும். மனித உரிமைகள், பொறுப்பார்ந்த மீன்பிடி, நிலைத்த வளர்ச்சி ஆகியவற்றை இலக்காகக்கொண்ட தேசிய, பிராந்திய மற்றும் சர்வதேச முன்முயற்சிகளுடன் இணைந்து அவற்றை முழுமையாக்க வல்லதாக வழிகாட்டு நெறிமுறைகள் உள்ளன. பொறுப்பார்ந்த மீன்பிடி நடத்தை விதிகளுடன் இணைந்து முழுமையாக்க வல்லதாகவும் பொறுப்பார்ந்த மீன்பிடியை ஆதரிப்பதற்காகவும், இந்தப் பொது உடன்படிக்கையின்படி நிலைத்த வகையில் வள ஆதாரங்களைப் பயன்படுவதற்காகவும் இந்த வழிகாட்டு நெறிமுறைகள் உருவாக்கப்பட்டுள்ளன.

4.2 சர்வதேசச்சட்டப் பத்திரங்களில் அரசுக்குள்ள உரிமை அல்லது கடமையைக் குறைக்கும் அல்லது பலவீனப்படுத்தும் ஒன்றாக இந்த வழிகாட்டு நெறிமுறைகளில் உள்ள எதனையும் கருதிக்கொள்ளக்கூடாது. புதிய திருத்தங்கள் கொண்டுவரவும், புதிய துணைச் சட்டங்களை உருவாக்கிக்கொள்ளவும், கட்டுப்படுத்தும் வாசகங்களை உள்ளிணைத்துக் கொள்ளவும் இந்த வழிகாட்டு நெறிமுறைகளைப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

# பகுதி 2:
# பொறுப்பார்ந்த மீன்பிடியும் நிலைத்த வளர்ச்சியும்
(RESPONSIBLE FISHERIES AND SUSTAINABLE DEVELOPMENT):

## 5. சிறுவீத மீன்பிடியில் அனுபவ உரிமை ஆளுகையும் வள ஆதார மேலான்மையும் (GOVERNANCE OF TENURE IN SMALL-SCALE FISHERIES AND RESOURCE MANAGEMENT)

**5.1** தற்போதிருக்கும் தலைமுறை மற்றும் எதிர்காலத் தலைமுறைகளின் வளர்ச்சித் தேவைகளையும் சுற்றுச்சூழல் தேவைகளையும் எதிர்கொள்ளும் வகையில் நீர் பல்லுயிர் சூழலையும் இயற்கை வள ஆதாரங்களையும் பொறுப்புள்ள வகையில், நிலைத்த வகையில் பயன்படுத்துவதற்கான தேவையை இந்த வழிகாட்டு நெறிமுறைகள் ஏற்றுக்கொள்கின்றன. சிறுவீத மீன்பிடி சமூகங்கள், அவர்களின் சமூக – பண்பாட்டு நல்வாழ்வின் அடிப்படையாக இருக்கின்ற வள ஆதாரங்கள் மீது பாதுகாப்பான அனுபவ உரிமை[2] கொண்டிருப்பது அவர்களின் வாழ்வாதாரத்திற்கும் நிலைத்த வளர்ச்சிக்கும் தேவையானதாக இருக்கிறது. ஆணும் பெண்ணும் அடங்கிய சிறு வீத மீன்பிடியாளர்கள், மீன் தொழிலாளர்களுக்குப் பயன் அளிக்கும் வகையில், பொறுப்பார்ந்த மீன்பிடி மற்றும் உயிர்ச்சூழல் மேலாண்மையால் கிடைக்கும் பலன்கள் சரிநிகர் முறையில் பிரித்துக்கொள்ளப்படுவதை இந்த வழிகாட்டு நெறிமுறைகள் ஆதரிக்கிறது.

### 5A. அனுபவ உரிமையை பொறுப்பார்ந்த முறையில் ஆளுகை செய்வது (Responsible governance of tenure)

**5.2** சிறுவீத மீன்பிடி தொடர்பான நிலம், மீன்வளம், வன வளம் குறித்த உரிமைகளை பொறுப்பார்ந்த முறையில் ஆளுகை செய்வது, மனித உரிமைகளையும், உணவுப் பாதுகாப்பையும், வறுமை ஒழிப்பையும், நிலைத்த வாழ்வாதாரத்தையும், சமூகத்தின் நிலைத்தன்மையையும், குடியிருப்பு பாதுகாப்பையும் பொருளாதார வளர்ச்சியையும் சமூக வளர்ச்சியையும் உத்திரவாதம் செய்வதற்கு அத்தியாவசியமானது என்பதை அனைத்து தரப்பினரும் அங்கீகரிக்க வேண்டும்.

**5.3** சிறுவீத மீனவர்களும், மீன் தொழிலாளர்களும் அவர்களின் சமூகங்களும் பாதுகாப்பான, சரிநிகரான, சமூக ரீதியாகவும் கலாச்சார ரீதியிலும் பொருத்தமுள்ள (கடல் மற்றும் உள்நாட்டு) மீன்வள அனுபவ உரிமை பெற்றிருப்பதையும், மேலும், சிறுவீத மீன்பிடி பகுதிகள், அவற்றின் அருகாமை நிலம் ஆகியவற்றின் மீதான அனுபவ உரிமையையும் கொண்டவர்களாக இருப்பதனையும், குறிப்பாக அனுபவ உரிமையில் பெண்களுக்கு சிறப்புக் கவனம் செலுத்துவதையும் அரசுகள் தங்கள் சட்டத்தின்படி உறுதி செய்ய வேண்டும்.

**5.4** எங்கெல்லாம் சிறுவீத மீன்பிடி சமூகங்கள் நீர் வள ஆதாரங்கள் மீது பொருத்தமான, பாரம்பரிய உடமை உரிமை கொண்டிருக்கிறார்களோ, அவற்றைக் கணக்கில் கொண்டு அனைத்துவிதமான நியாயமான அனுபவ உரிமைகளையும் அரசுகள் அவர்களின் சட்டங்களின் படியும், மற்ற பிற தரப்பினரும் மதிக்கவும் பாதுகாக்கவும் வேண்டும். எப்பொழுதெல்லாம் தேவை ஏற்படுகிறதோ அப்போதெல்லாம், பாரம்பரிய அனுப உரிமைகளைப் பாதுகாக்க சட்டங்கள் இயற்றப்பட வேண்டும். உரிமைதாரர்களையும் அவர்களின் உரிமைகளையும் இனம் காணவும், பதிவு செய்யவும், மதிக்கவும் தேவையான நடவடிக்கைகளை அரசுகள் மேற்கொள்ள வேண்டும். தொல்குடிகள், தேசிய இன சிறுபான்மையினர் உட்பட, சிறுவீத மீன்பிடிச் சமூகங்கள், உள்ளூர் விதிகளின்படியும், நடைமுறையின்படியும் அதுபோல பாரம்பரிய அல்லது முன்னுரிமையின் அடிப்படையில் மீன் வள ஆதாரங்களையும் நிலத்தையும் அனுபவிப்பதற்கான

---

[2] அனுபவ உரிமை என்ற சொல்லாக்கம் தேசிய உணவுப் பாதுகாப்புச் சூழலைக் கணக்கில் கொண்டு நிலம் – வனம் – மீன்வளம் – வனவள உரிமை பொருப்பார்ந்த ஆளுகைக்காக தன்னார்வ வழிகாட்டு நெறிமுறைகளில் (Voluntary Guidelines on the Responsible Governance of Tenure of Land, Fisheries and Forests in the Context of National Food Security) பயன்படுத்தப்பட்ட பொருளில் இங்கே பயன்படுத்தப்படுகிறது.

உரிமை, சர்வதேச மனித உரிமை சட்டங்களின்படி, அங்கீகரிக்கப்பட வேண்டும், மரியாதை செலுத்தப்பட வேண்டும், பாதுகாக்கப்பட வேண்டும். பொருத்தமான வகையில் UN DRIP-ம் தேசிய அல்லது இன, மத, மொழி சார்ந்த சிறுபான்மையினரைச் சேர்ந்தவர்களின் உரிமைக்கான பிரகடனத்தின் (Declaration on the Rights of Persons Belonging to National or Ethnic, Religious and Linguistic Minorities) அம்சங்கள் கருத்தில் கொள்ளப்பட வேண்டும். பெண்களின் உரிமையை வலுப்படுத்தும் வகையில் அரசியல் சட்ட அல்லது சட்ட தீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படும்போது, பாரம்பரிய பழக்கங்களுடன் மோதும் நிலை வரும் என்றால், அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைத்து பாரம்பரிய உடமை உரிமை முறைகளில் இதுபோன்ற மாற்றங்கள் மேற்கொள்ளப்படுவதற்கு முயற்சி மேற்கொள்ள வேண்டும்.

5.5 நீர் சார்ந்த உள்ளூர் மற்றும் கடற்கரை உயிர்ச்சூழலை மீட்டெடுப்பது, பேணுவது, இணைந்து மேலாண்மை செய்வதற்கான சிறுவீத மீன்பிடி சமூகத்தினர் மற்றும் தொல் முதல் குடிகளின் பாத்திரத்தை அரசுகள் அங்கீகரிக்க வேண்டும்.

5.6 மீன் வள ஆதாரங்கள் உள்ளிட்ட நீர் மற்றும் நில வள ஆதாரங்களை அரசு உரிமையாக கொண்டிருக்கும்போது அல்லது கட்டுப்படுத்தும்போது அவற்றின் மீதான அனுபவ உரிமையையும் பயன்பாட்டையும் அவற்றுடன் சமூக, பொருளாதார, சுற்றுச்சூழல் நோக்கங்களையும் ஒன்றோடு ஒன்று தொடர்பு படுத்திப் பரிசீலிக்க வேண்டும். பொதுவில் வைத்துப் பயன்படுத்தப்படும் வள ஆதாரங்களை, குறிப்பாக சிறுவீத மீன்பிடி சமூகங்களின் வள ஆதாரங்களை அரசுகள் அங்கீகரிக்கவும் பாதுகாக்கவும் வேண்டும்.

5.7 பொறுப்பார்ந்த மீன் வள ஆதார நடத்தை விதிகளின் பிரிவு 18ஐக் கருத்தில் எடுத்துக்கொண்டு, பல்வேறு பிரிவினர், குறிப்பாக எளிதில் பாதிப்புக்கு ஆளாக கூடிய பிரிவினருக்கு சரி நிகர் பலன் கிடைக்கும் வகையில், தேசிய கடல் பரப்புக்குள் சிறுவீத மீன்பிடி சமூகத்தினர் மீன் பிடிப்பதற்கு முன்னுரிமை அளிக்க வேண்டும். பொருத்தமான சூழல்களில், சிறுவீத மீன்பிடி சமூகத்தினருக்கென தனியானதொரு பகுதி உருவாக்கப்படுவதையும் அமலாக்கம் செய்யப்படுவதையும் பரிசீலிக்க வேண்டும். வள ஆதாரங்களை அணுகுவதற்கு மூன்றாவது தரப்பினர் அல்லது நாட்டிற்கு அனுமதி ஒப்பந்தங்கள் போடுவதற்கு முன்பு சிறுவீத மீன் பிடித் தொழிலின் நிலையைப் பற்றி உரிய பரிசீலனை மேற்கொள்ளப்பட வேண்டும்.

5.8 நிலம், மீன்வளம், வனம் குறித்த அனுபவ உரிமை பற்றிய பொறுப்பார்ந்த ஆளுகைக்கான தன்னார்வ வழிகாட்டுதல்களின் வாசகங்களைக் கணக்கில் எடுத்துக் கொண்டு, சிறுவீத மீன்பிடிச் சமூகத்தினருக்கு சரிநிகர் வாய்ப்புகளை அளிக்கும் வகையில், அரசுகள் பொருத்தமான முறையில், மீன் வள ஆதாரங்களை மறுவிநியோகம் செய்யும் சீர்திருத்தங்களை மேற்கொள்ளலாம்.

5.9 சிறுவீத மீன்பிடி சமூகங்கள் கண்மூடித்தனமாக வெளியேற்றப்படாதிருப்பது அல்லது அத்துமீறப்படாதிருப்பதையும் அரசுகள் உத்திரவாதம் செய்ய வேண்டும். சிறுவீத மீன்பிடி பகுதிகளுக்குள் பிற பயன்பாட்டாளர்களின் போட்டி அதிகரித்து வருவதை அரசுகள் இனம் காண வேண்டும். பிற பிரிவினர் போட்டிக்கு வரும்போது நடக்கும் மோதலில், சிறுவீத மீன்பிடி சமூகங்கள், குறிப்பாக எளிதில் பாதிப்புக்கு ஆளாகும் பிரிவினர் மற்றும் ஒதுக்கப்பட்ட பிரிவினர், பலவீனமான தரப்பாக ஆகிவிடுவார்கள் என்பதையும் அரசுகள் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும். பிற பிரிவுகளின் வளர்ச்சி அல்லது செயல்பாடுகளினால் அச்சுறுத்தலுக்கு ஆளாகும் சமயத்தில் இந்த பலவீனமான பிரிவினர் தங்கள் வாழ்வாதாரத்தைக் காத்துக் கொள்ள அரசுகளின் ஆதரவு தேவையானதாக இருக்கலாம்.

5.10 சிறுவீத மீன்பிடி சமூகத்திற்குப் பாதிப்பு ஏற்படுத்தக் கூடிய பெரிய அளவிலான வளர்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு முன்பு, தேசிய சட்டங்களுக்கு ஏற்ப தாக்க மதிப்பீட்டு ஆய்வுகளின் மூலம் சமூக, பொருளாதார, சுற்றுச்சூழல் பாதிப்புகளை மதிப்பிடவும், இந்தச் சமூகங்களுடன் பொருளுள்ள, பலன் தரும் கலந்தாலோசனைகளை அரசுகள் மேற்கொள்ளவும் வேண்டும்.

5.11 எளிதில் பாதிப்புக்கு ஆளாக வாய்ப்புள்ளவர்கள் மற்றும் ஒதுக்கப்பட்ட பிரிவினர் உட்பட, சிறுவீத மீன்பிடி சமூகங்களும், தனி நபர்களும், உரிய காலத்தில், செலவு பிடிக்காத, பலன் தரக் கூடிய வழிமுறைகளில் தேசிய சட்டங்களுக்கு ஏற்ப, அனுபவ உரிமை குறித்த தாவாக்களைத் தீர்த்துக் கொள்ள நீதி மற்றும் நிர்வாக அமைப்புகளை அரசுகள் உருவாக்க வேண்டும். அதுபோன்ற தாவாக்களைத் தீர்த்துக்கொள்ள மாற்று ஏற்பாடுகளும் இருக்க வேண்டும். தேவையான போதுமேல் முறையீடு செய்வதற்கான உரிமை, உள்ளிட்ட தீர்வு காண்பதற்கான மாற்று முறைகளையும் அந்த நீதி–நிர்வாக அமைப்புகள் அளிப்பதாக இருக்க வேண்டும். வழங்கப்படும் தீர்ப்பில் கூறப்படும் தீர்வுகள், மீட்டளிப்பது (restitution) எதிர்கால இழப்புகளுக்கு மாற்றீடு செய்வது (indemnity)

வெறும் இழப்பீடு அளிப்பது (compensation) செப்பனிடுதல் (reparation) உள்ளிட்டவற்றை தேசிய சட்டங்களுக்கு ஏற்ப மிக விரைவாக செய்திட வேண்டும்.

5.12 இயற்கை பேரழிவின் காரணமாகவோ, அல்லது / அத்துடன் ஆயுத மோதல்களின் காரணமாகவோ இடம் பெயர நேர்ந்த சிறுவீத மீன்பிடி சமூகங்களுக்கு, மீன்வள ஆதாரங்களின் நிலைத் தன்மையைக் கணக்கில் எடுத்துக்கொண்டு, மீன்பிடி பகுதிகளையும், கடற்கரையோர நிலங்களையும் மீட்டுக்கொடுப்பதற்கு அரசுகள் பாடுபட வேண்டும். அதிபயங்கர மனித உரிமை மீறல்களால் பாதிக்கப்பட்ட சிறு வீத மீன்பிடி சமூகங்களின் வாழ்வையும் வாழ்வாதாரத்தையும் மறு நிர்மானம் செய்வதற்கான, அவர்களுக்கு ஆதரவான நிர்மானம் செய்வதற்காக, அவர்களுக்கு ஆதரவான நிர்வாக அமைப்போன்றை அரசுகள் ஏற்படுத்த வேண்டும். ஆயுத மோதல்கள் அல்லது / அத்துடன் இயற்கை பேரழிவால் பாதிப்பு நிகழும்போது எடுக்கப்படும் அதுபோன்ற நடவடிக்கைகளில், உடமை உரிமைகளில் பெண்களுக்கு எதிரான பாரபட்சம் எதனையும் ஒழிப்பதற்கான நடவடிக்கைகளும் மேற்சொன்னவற்றில் அடங்கியவையாக இருக்க வேண்டும்.

## 5B. நிலைத்த வள ஆதார மேலாண்மை
(Sustainable resource management)

5.13 மீன் வள ஆதாரங்களை நீண்டகாலப் நோக்கில் பேணுவது, நிலைத்த வகையில் பயன்படுத்துவது அத்துடன், உணவு உற்பத்தியின் உயிர்ச்சூழல் அடித்தளத்தைப் பாதுகாப்பதாகவும் உள்ள நடவடிக்கைகளை, அரசுகளும் மீன் வள ஆதாரங்களை மேலாண்மை செய்வதில் ஈடுபட்டுள்ள பிறரும் மேற்கொள்ள வேண்டும். சிறுவீத மீன்பிடியின் தேவைகளுக்கு உரிய அங்கீகாரம் அளிக்கின்ற பொறுப்பார்ந்த மீன்பிடி நடத்தை விதிமுறைகள் உள்ளிட்ட, தற்போதிருக்கும் தன்னார்வ வழிகாட்டுதல்கள், தேசிய-சர்வதேச சட்டங்களில் உள்ள கடப்பாடுகளுக்கு பொருந்திப்போகும் வகையில் பொருத்தமான மேலாண்மை முறைகளை அவர்கள் உருவாக்கவும் அவற்றை அமலாக்கம் செய்யவும் வேண்டும்.

5.14 உரிமைகளும் பொறுப்புகளும் ஒன்றையொன்று சார்ந்தவை என்பதை அனைத்து தரப்பினரும் அங்கீகரிக்க வேண்டும். அனுபவ உரிமைகளுக்கு நிகராக கடமைகள் இருக்கின்றன. அத்துடன், நீண்ட காலப் பேணுகையையும், நிலைத்த வகையில் வள ஆதாரங்களை பயன்படுத்துவதையும், உணவு உற்பத்தியின் உயிர்ச்சூழல் அடித்தளத்தைப் பராமரிப்பதையும் அவர்கள் மேற்கொள்ள வேண்டும். சிறுவீத மீனவ சமூகத்தினர், நீர் உயிர்ச் சூழலுக்கும் சம்பந்தப்பட்ட உயிரினங்களுக்கும் கேடு விளைவிக்காத, வள ஆதாரங்களின் நிலைத்தன்மைக்கு ஆதரவான மீன்பிடி முறைகளைப் பயன்படுத்த வேண்டும்.

5.15 சிறுவீத மீன்பிடி சமூகங்களின் நியாய பூர்வமான அனுபவ உரிமைகளையும் அமைப்பு முறைகளையும் கருத்தில்கொண்டு, அவர்கள் சார்ந்துள்ள, பாரம்பரியமாக பயன்படுத்திவந்த வள ஆதாரங்களை அவர்களின் நல்வாழ்விற்காக மேலாண்மை செய்வதில் பங்கெடுக்கவும் அவற்றுக்கான பொறுப்பேற்றுக் கொள்வதற்கான ஏற்பாடுகளைச் செய்வதையும் பயிற்சி அளிப்பதையும் அரசுகள் மேற்கொள்ள வேண்டும். அதுபோல, அவர்களின் வாழ்வாதார வாய்ப்புகளைப் பாதிக்கும், பாதுகாக்கப்பட்ட பகுதிகள் உள்ளிட்ட, மேலாண்மை நடவடிக்கைகளை வடிவமைப்பது, திட்டமிடுவது, பொருத்தமுள்ள முறையில், அமலாக்கம் செய்வது ஆகியவற்றில், பெண்களுக்கும் எளிதில் பாதிப்புக்கு ஆளாகும் பிரிவினர் மற்றும் ஒதுக்கப்பட்ட பிரிவினருக்கு முக்கியத்துவம் அளித்து, சிறுவீத மீன்பிடி சமூகங்களை ஈடுபடுத்திக்கொள்ள வேண்டும்.

5.16 கண்காணிப்பு-கட்டுப்பாடு-குற்றத் தவிர்ப்பு கண்காணிப்பு (monitoring, control and surveillance - MCS) முறைகளை உருவாக்கும்போதும் அல்லது தற்போதிருப்பதை மேம்படுத்தும்போதும் சிறுவீத மீன்பிடிக்குப் பொருத்தமுள்ளதாகவும், நடைமுறைப்படுத்தக் கூடியதாகவும் இருப்பதை அரசுகள் உறுதி செய்ய வேண்டும். கூட்டு நிர்வாகமுறை என்பதாக, சிறுவீத மீன்பிடியாளர்களை பொருத்தமான முறையில் ஈடுபடுத்திக்கொண்டு பங்கேற்பு முறையை உருவாக்குவதாக அதுபோன்ற ஏற்பாடுகளை செய்ய வேண்டும். கடல் உயிர்ச் சூழலுக்கும் உள்நாட்டு உயிர்ச் சூழலுக்கும் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும் சட்ட விரோத அல்லது/ மற்றும் அழிவுகர மீன்பிடி முறைகளை முன் கூட்டியே தடுப்பதற்கும், ஒழிப்பதற்குமான அமலாக்க மற்றும் கண்காணிப்பு கட்டமைப்பை அரசுகள் உறுதி செய்ய வேண்டும். மீன்பிடி நடவடிக்கைகளைப் பதிவு செய்வதை மேம்படுத்தும் முயற்சிகளை அரசுகள் மேற்கொள்ள வேண்டும். MCS முறையை சிறுவீத மீன்பிடியாளர்கள் ஆதரிக்க வேண்டும் அத்துடன், அந்நடவடிக்கையை மேற்கொள்வதற்கு உதவியாக மீன்வளத்துறை அதிகாரிகளுக்குத் தேவையான தகவல்களை அளிக்க வேண்டும்.

5.17 சம்பந்தப்பட்ட தரப்பினரும் பங்காளிகளும் சேர்ந்து மேற்கொள்ளும் கூட்டு நிர்வாக ஏற்பாடுகளில் ஒவ்வொருவரின் பாத்திரம், பொறுப்புகளை உறுதி செய்வதற்கு சட்டப்படியான, பங்கேற்பு நிகழ்வுப்போக்கில் தெளிவு ஏற்படுத்திக்கொள்வதையும் உடன்படுவதையும்

அரசுகள் உத்திரவாதம் செய்ய வேண்டும். அனைத்துத் தரப்பினரும் ஒப்புக்கொள்ளப்பட்ட மேலாண்மைப் பாத்திரங்களை மேற்கொள்வதற்கான பொறுப்புள்ளவர்கள் ஆவார்கள். பொருத்தமான உள்ளூர் மற்றும் தேசிய தொழில் அமைப்புகளின் சங்கங்களிலும், மீன் வள அமைப்புகளிலும் சிறுவீத மீன்பிடி அங்கம் வகிப்பதை உறுதி செய்வதற்கும், மீன்பிடி தொடர்பான முடிவெடுக்கும் – கொள்கை உருவாக்கும் அமைப்புகளில் துடிப்புடன் பங்கேற்பதற்கும் அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

5.18 கூட்டு நிர்வாகத்திலும், பொறுப்பார்ந்த மீன்பிடியிலும், மீன்பிடிக்கு முந்தைய நடவடிக்கையில் ஈடுபடுபவர்களாக இருந்தாலும், பிந்தைய நடவடிக்கையில் ஈடுபடுபவர்களாக இருந்தாலும், ஆண்களும் பெண்களும், அவர்களின் குறிப்பான அறிவையும் பார்வையையும் தேவைகளையும் பகிர்ந்துகொள்ள அரசுகளும் சிறுவீத மீன்பிடியில் உள்ள செயல்பாட்டாளர்களும் ஊக்கமளிக்க வேண்டும், ஆதரவு அளிக்க வேண்டும். பெண்களின் சரிநிகர் பங்கேற்பை உத்திரவாதப்படுத்துவதற்கு அனைத்து தரப்பினரும் குறிப்பான பங்களிப்பு செய்ய வேண்டும். இந்த நோக்கத்தை அடைவதற்கென சிறப்பு நடவடிக்கைகளைக் கட்டமைக்க வேண்டும்.

5.19 நாடுகளுக்கு இடையில் பொதுவான நீர்ப்பரப்பு, அல்லது பொதுவான மீன்வளம் போன்ற எல்லை பிரச்சனைகள் வரும்போது, சிறுவீத மீன்பிடிச் சமூகத்தினருக்கு அளிக்கப்பட்டிருந்த அனுபவ உரிமைகளைப் பாதுகாக்க அரசுகள் சேர்ந்து பணியாற்ற வேண்டும்.

5.20 மிகை மீன்பிடியால் வளஆதாரங்கள் கூடுதலாகச் சுரண்டப்பட்டு, சிறுவீத மீன்பிடிக்கு பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தும் நடவடிக்கைகளுக்குச் சாதகமான கொள்கைகளையும் நிதி நடவடிக்கைகளையும் அரசுகள் தவிர்க்க வேண்டும்.

## 6. சமூக வளர்ச்சியும் வேலைவாய்ப்பும் கௌரவமான பணி நிலையும் (SOCIAL DEVELOPMENT, EMPLOYMENT AND DECENT WORK)

6.1 ஒருங்கிணைந்த உயிர்ச்சூழல், சிறுவீத மீன்பிடி குறித்த ஒட்டுமொத்த அணுகுமுறை, வாழ்வாதாரத்தின் சிக்கலானத் தன்மையை கணக்கில் எடுத்துக் கொண்ட வளர்ச்சி ஆகியவற்றை அனைத்துத் தரப்பினரும் கணக்கில் கொள்ள வேண்டும். சிறுவீத மீன்பிடி சமூகத்தினர் ஆற்றல் உள்ளவர்களாக மாறுவதையும் அவர்கள் தங்களின் மனித உரிமைகள் அனைத்தையும் அனுபவிப்பதையும் உறுதி செய்யும் சமூக–பொருளாதார வளர்ச்சிக்கு ஏற்ப பொருத்தமான கவனம் செலுத்தப்பட வேண்டும்.

6.2 மருத்துவம், கல்வி, எழுத்தறிவு, கணினிப் பயன்பாடு இவற்றுடன் மீன் வள ஆதாரங்களுக்கு கூடுதல் மதிப்பு கூட்டும் இதர தொழில்நுட்ப அறிவு, இவைமட்டுமல்லாமல், விழிப்புணர்வு அதிகரிப்பு போன்ற மனித வளர்ச்சிகளை மேம்படுத்துவதில் அரசுகள் முதலீடு செய்ய வேண்டும். போதுமான வீட்டு வசதி, பாதுகாப்பானதும், சுத்தமானதுமான சுகாதாரம், தனிநபருக்கும் வீட்டுப் பயன்பாட்டுக்குமான பாதுகாப்பான குடிநீர், ஆற்றல் மூலங்கள் உள்ளிட்ட அத்தியாவசிய சேவைகள் சிறுவீத மீன்பிடி சமூகத்தினருக்கு முன்னேறிச் செல்லும் வகையில் கிடைப்பதற்கு அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். சேவைகளைப் பெறுதலிலும், பாரபட்சம் காட்டப்படாதிருத்தலிலும், பிற மனித உரிமைகளிலும் பெண்கள் – தொல்குடிகள், பிற பாதிப்புக்கு ஆளாக வாய்ப்புள்ள பிரிவினர் மற்றும் ஒதுக்கப்பட்ட பிரிவினர்களுக்கு சலுகை முன்னுரிமை அளித்தல் சரிநிகர் பலனளிப்பது தேவையானதாக இருக்கும் சமயங்களில் அவ்வாறு செய்வதை ஏற்றுக்கொள்ளவும் அவற்றுக்கான நடவடிக்கை எடுக்கவும் வேண்டும்.

6.3 சிறுவீத மீன்பிடித் தொழிலாளர்களுக்கான சமூகப் பாதுகாப்புத் திட்டங்களை உருவாக்கிடுதல் வேண்டும். அரசுகள், சிறுவீத மீன்பிடியின் குணாம்சங்களைக் கணக்கில் எடுத்துக்கொண்டு அந்த தொழிலின் மதிப்புக் கூட்டும் சங்கிலித் தொடர் முழுமைக்கும் சமூக பாதுகாப்புத் திட்டத்தை வழங்க வேண்டும்.

6.4 உதாரணமாக, சேமிப்பு, கடன், காப்பீட்டுத் திட்டங்கள் போன்ற பிற, சிறுவீத மீன்பிடியாளர்களுக்குப் பொருத்தமான சேவைகள் அவர்களுக்குக் கிடைப்பதற்கான ஆதரவு நடவடிக்கைகளை அரசுகள் மேற்கொள்ள வேண்டும். மேலும், அதுபோன்ற சேவைகள் பெண்களுக்குக் கிடைப்பதற்கு கூடுதல் அழுத்தம் கொடுக்க வேண்டும்.

6.5 நீர் பரப்பிலோ அல்லது நிலப்பரப்பிலோ நடக்கின்ற, ஆணோ பெண்ணோ மேற்கொள்கின்ற, சிறுவீத மீன்பிடி மதிப்புக் கூட்டும் நடவடிக்கைகள் அனைத்தையும் பொருளாதார மற்றும் தொழில்முறை நடவடிக்கை என்று அரசுகள் அங்கீகரிக்க வேண்டும். பகுதி நேரம், அவ்வப்போது மேற்கொள்ளப்படுகின்ற, அல்லது பிழைப்புக்காக மட்டும் மேற்கொள்கின்ற அனைத்து

நடவடிக்கைகளையும் கணக்கில் கொள்ளவேண்டும். மீன்பிடிக்குப் பிந்தைய நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற தொழிலாளர்கள், சிறுவீத மீன்பிடியில் ஈடுபடுகின்ற பெண்கள் என்ற எளிதில் பாதிப்புக்கு ஆளாக வாய்ப்புள்ள குழுவினருக்கு தொழில்முறையிலான வாய்ப்புகளும் அமைப்பு ரீதியான வாய்ப்புகளும் மேம்படுத்தப்பட வேண்டும்.

6.6 அமைப்பாக்கப்பட்ட அல்லது அமைப்பாக்கப்படாத நிலையில் உள்ளவர்கள் உட்பட, சிறுவீத மீன்பிடி தொழிலாளர்கள் அனைவருக்கும் கௌரவமான பணி நிலையை வழங்கிட வேண்டும். தேசிய சட்டங்களுக்கு ஏற்ப, சிறுவீத மீன்பிடியை நிலைத்தன்மை கொண்டதாக்குவதற்காக, அமைப்பான மற்றும் அமைப்பாகாத துறைகளில் உள்ள மீன்பிடி செயல்பாடுகள் பொருத்தமான நிலைமையில் இருப்பதற்கான சூழலை அரசுகள் உருவாக்க வேண்டும்.

6.7 சிறுவீத மீனவர்களும் அதன் தொழிலாளர்களும் போதுமான வாழ்க்கைத் தரத்தில் வாழ்வதற்கும் தேசிய சர்வதேச மனித உரிமை தர நிர்ணயங்களுக்குப் பொருந்திப் போகிற பணி நிலைமைகளில் வேலை செய்வதற்குமான உரிமையை முன்னேறிச் செல்லும் வகையில் யதார்த்தமாக்க அரசுகள் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். சிறுவீத மீன்பிடிச் சமூகங்கள் நிலைத்த வகையில் முன்னேறுவதற்கான வாய்ப்பளிக்கும் சூழ்நிலையை அரசுகள் உருவாக்க வேண்டும். சிறுவீத மீனவர்கள் மற்றும் உணவு உற்பத்தியாளர்கள், குறிப்பாக பெண்கள் அவர்களின் உழைப்பிற்கும், மூலதனத்திற்கும் மேலாண்மைக்கும் ஏற்ற நியாயமான கூலி பெறுவதற்கும் அவர்கள் இயற்கை வள ஆதாரங்களைப் பேணுவதற்கும் நிலைத்த வகையில் மேலாண்மை செய்வதற்கும் அனுமதிப்பதற்காக, கடல் மற்றும் நன்னீர் பரப்புகளையும் உள்நாட்டுப் பகுதிகளையும் பயன்படுத்துவது பற்றிய அரவணைத்துச் செல்கின்ற, பாரபட்சமற்ற, வலுவான பொருளாதாரக் கொள்கைகளைப் பின்பற்ற வேண்டும்.

6.8 சிறுவீத மீன்பிடி சமூகங்களுக்கான, அவர்கள் மீன்பிடி தொடர்பான நடவடிக்கைகளில் கிடைக்கும் வருமானத்திற்கும் கூடுதலாக, அவர்களுக்குத் தேவைப்படும்போது, நிலைத்த வகையிலான வள ஆதாரப் பயன்பாடு மற்றும் வாழ்வாதார பன்முகத் தன்மைக்காக, ஏற்கனவே நடப்பில் இருக்கும் துணைத் தொழில்களை அல்லது மாற்று வருவாய் வழிகளை அரசுகள் வலுப்படுத்த வேண்டும் அல்லது உருவாக்க வேண்டும். உள்ளூர் பொருளாதாரத்தில் சிறுவீத மீன்பிடியின் பாத்திரத்தையும் பரந்துபட்ட பொருளாதாரத்துடன் அது கொண்டுள்ள தொடர்புகளையும் அங்கீகரிக்கவும் அதிலிருந்து பலன் பெறவும் வேண்டும். சமூகம் சார்ந்த சுற்றுலா, பொறுப்பார்ந்த சிறுவீத நீருயிர் வளர்ப்பு போன்ற வளர்ச்சிகளின் மூலம் சிறுவீத மீன்பிடிச் சமூகம் சரிநிகராகப் பலன் பெற வேண்டும்.

6.9 குற்றங்களும், வன்முறைகளும் அமைப்பாக்கப்பட்ட குற்ற நடவடிக்கைகளும், கொள்ளையும், திருட்டும், பாலியல் துஷ்பிரயோகமும், ஊழலும், அதிகார துஷ்பிரயோகமும் இல்லாத சூழலில் சிறுவீத மீனவ சமூகத்தின் ஆண்களும் பெண்களும் மீன்பிடியிலும், அது தொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான நிலைமைகளை அனைத்து தரப்பினரும் உருவாக்க வேண்டும். அனைத்து தரப்பினரும் வன்முறையை ஒழிக்கவும், அதுபோன்ற நடவடிக்கைகளால் பாதிக்கப்படும் சிறுவீத மீன்பிடிச் சமூகத்துப் பெண்களைப் பாதுகாக்கவும் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். வன்முறை, துஷ்பிரயோகம், குடும்பத்திற்குள் நடக்கும் வன்முறைகள் உட்பட, இன்ன பிறவற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைப்பதை அரசுகள் உறுதி செய்ய வேண்டும்.

6.10 புலம்பெயர்வது மிகச்சாதாரணமான வாழ்வாதார செயல்முறையாக சிறுவீத மீன்பிடியில் இருப்பதால், சிறுவீதமீன்பிடியாளர்களும் தொழிலாளர்களும் இடம் பெயர்வதை அரசும், சிறுவீத மீன்பிடி செயல்பாட்டாளர்களும், பாரம்பரிய அல்லது வழக்கத்தின்படி அதிகாரத்தில் இருப்பவர்களும் புரிந்து கொள்ளவும், அங்கீகரிக்கவும், மதிக்கவும் வேண்டும். மீன்வள ஆதாரங்களை நிலைத்த வகையில் பயன்படுத்துகின்ற, உள்ளூரின் சமூகம் சார்ந்த ஆளுகையையும், தேசிய சட்டத்தின்படி நடைபெறுகின்ற சிறுவீத மீன்பிடி வளர்ச்சியையும் சீர்குலைக்காத புலம்பெயரும் மீனவர்களை நியாயமான வகையிலும் போதுமான வகையிலும் ஒருங்கிணைத்துக்கொள்வதற்கான பொருத்தமான அமைப்பு வடிவம் ஒன்றை அரசுகளும் சிறுவீத மீன்பிடி செயல்பாட்டாளர்களும் உருவாக்க வேண்டும். தேசிய எல்லைகளைக் கடந்து, சிறுவீத மீன்பிடிக்காக இடம் பெயரும் மீனவர்கள், மீன் தொழிலாளர்கள் குறித்து சம்பந்தப்பட்ட அரசுகள் ஒருங்கிணைப்பு செய்துகொள்வதின் முக்கியத்துவத்தை அரசுகள் உணர வேண்டும். சிறுவீத மீன்பிடி அமைப்புகள், நிறுவனங்களுடன் கலந்தாலோசனை செய்து கொள்கைகளும் மேலாண்மை முறைகளும் தீர்மானிக்கப்பட வேண்டும்.

6.11 மீனவர்கள் தேச எல்லைகளைக் கடந்து

செல்வதற்கான காரணங்களையும் விளைவுகளையும் அரசுகள் புரிந்துகொள்ளவும், சிறுவீத மீன்பிடியின் நிலைத் தன்மையைப் பாதிக்கும் எல்லைகள் கடந்த பிரச்சனைகளைப் பற்றிய புரிதல்களுக்குப் பங்காற்ற வேண்டும்.

6.12 அனைத்து சிறுவீத மீனவர்கள், தொழிலாளர்களின் ஆரோக்கியப் பிரச்சனைகள் மீதும், நியாயமற்ற வேலை நிலைமைகள் மீதும் அரசுகள் குறிவைத்து செயல்பட வேண்டும். அதற்காக, தேசிய சட்டங்களுக்குப் பொருந்தும் வகையிலும், சம்பந்தப்பட்ட அரசுகள் ஒப்புக்கொண்டுள்ள, பொருளாதார, சமூக, பண்பாட்டு உரிமைகள் பற்றிய சர்வதேச பொதுப் புரிதல் ஒப்பந்தம் (International Covenant on Economic, Social and Cultural Rights - ICESCR) போன்ற சர்வதேச சட்ட பத்திரங்கள், சர்வதேச மனித உரிமை தர நிர்ணயங்கள், சர்வதேச தொழிலாளர் அமைப்பினால் (International Labour Organization - ILO) உருவாக்கப்பட்ட பொருத்தமுள்ள சர்வதேச பொதுப்புரிதல் ஒப்பந்தங்கள் ஆகியவற்றுக்குப் பொருந்திப் போகும் வகையிலும் தேவையான சட்டங்களை இயற்றிக்கொள்ளவும், அமலாக்கம் செய்யவும் வேண்டும். மீன்வள மேலாண்மை மற்றும் வளர்ச்சி நடவடிக்கைகளின் ஒருங்கிணைந்த பகுதியாக பணியிட ஆரோக்கியமும், பாதுகாப்பும் இருப்பதை உறுதி செய்ய அனைத்துத் தரப்பினரும் பாடுபட வேண்டும்.

6.13 அரசுகள் பலவந்த உழைப்பை ஒழிக்க வேண்டும். அத்துடன், ஆண்கள் – பெண்கள் – குழந்தைகள் கடன் வலையில் சிக்கி வலுக்கட்டாய உழைப்புக்கு ஆளாவதைத் தடுக்க வேண்டும். சிறுவீத மீன்பிடி உள்பட மீன்பிடியில் பலவந்த உழைப்பை ஒழிப்பதற்காக, இடம் பெயர்ந்தவர்கள் உள்ளிட்ட மீனவர்கள், மீன் தொழிலாளர்களைப் பாதுகாப்பதற்காக பலன் தரும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

6.14 சிறுவீத மீனவ சமூகத்தின் இளைஞர்களுக்கு, அவர்களின் வேலை தேர்வுக்கு மதிப்பளித்து, பலன் தரும், கௌரவமான வேலைகளை பெற்றுத் தரவல்ல, சிறுவீத மீனவ சமூகத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பள்ளிகளையும் கல்வி வாய்ப்புகளையும் அளிக்க வேண்டும். அனைத்து சிறுவர்கள், சிறுமிகள், இளவயது ஆண்கள் – பெண்களுக்கு சம வாய்ப்பளிப்பது மட்டுமல்லாமல், அவர்களுக்கு அவ்வாய்ப்புகள் கிட்டும் வகையில் அரசுகள் அளிக்க வேண்டும்.

6.15 குழந்தைகளின் நல்வாழ்வும், அவர்களின் எதிர்காலத்திற்கும், விரிந்த பார்வையில் பார்த்தால், சமூகத்தின் எதிர் காலத்திற்கும் முக்கியமானதென்பதை சிறுவீத மீன்பிடி செயல்பாட்டாளர்கள் அங்கீகரிக்க வேண்டும். குழந்தைகள் பள்ளிக்குச் செல்வதும், அனைத்து துஷ்பிரயோகங்களிலிருந்தும் பாதுகாக்கப்படுவதும் குழந்தைகள் உரிமை பற்றி பொதுப்புரிதல் ஒப்பந்தத்தில் கண்டுள்ளபடி அனைத்து உரிமைகளையும் பெறுவதும் வேண்டும்.

6.16 கடலில் பாதுகாப்பு (கடல் மற்றும் உள்நாடு) என்ற பிரச்சனையைப் பற்றியுள்ள சிக்கலான நிலையையும் பற்றாக்குறையான பாதுகாப்பிற்கான பல்வகை காரணங்களை அனைத்துத் தரப்பினரும் அங்கீகரிக்க வேண்டும். இது அனைத்து மீன்பிடி நடவடிக்கைகளுக்கும் பொருந்தும்.

சிறுவீத மீன்பிடியில் வேலை செய்தல், கடல் பாதுகாப்பு தொடர்பாக, சர்வதேச உணவு விவசாய அமைப்பு (FAO) சர்வதேச தொழிலாளர் அமைப்பு (ILO), சர்வதேச கடல்சார் அமைப்பு (International Maritime Organization - IMO) ஆகியவற்றின் சர்வதேச வழிகாட்டுதல்களுக்குப் பொருந்திப்போகும் வகையில் தேசிய அளவில் சட்டங்களை இயற்றுவதையும், வளர்தெடுப்பதையும் அமலாக்கம் செய்வதையும் அரசுகள் உறுதி செய்ய வேண்டும்.[3]

6.17 சிறுவீத மீன்பிடியில் (உள்நாடு மற்றும் கடல்) பணியிடப் பாதுகாப்பு ஆரோக்கியம் உள்ளிட்ட மேம்பட்ட கடல் பாதுகாப்பினை அடைய வேண்டுமென்றால், மீனவர்கள் துடிப்புடன் பங்கெடுக்கும் ஒத்திசைந்த, ஒருங்கிணைந்த தேசிய செயல் திட்டத்தை வளர்த்தெடுத்து, போதுமான அளவுக்குப் பிராந்திய ஒருங்கிணைப்புடன் நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதை அரசுகள் அங்கீகரிக்க வேண்டும். மேலும், சிறுவீத மீனவர்களின் கடல் பாதுகாப்பு பொதுவான மீன்வள மேலாண்மையுடன் ஒருங்கிணைந்ததாக இருக்க வேண்டும். மற்ற பல நடவடிக்கைகளுடன், தேசிய விபத்து அறிக்கையைப் பராமரிப்பது, கடல் பாதுகாப்பு விழிப்புணர்ச்சி நிகழ்ச்சிகளை நடத்துவது, சிறு வீத மீன்பிடியில் கடல் பாதுகாப்புக்கான பொருத்தமான சட்டத்தைக் கொண்டுவருவது உள்ளிட்ட

[3] மீனவர்கள் மற்றும் மீன்பிடிகலங்களுக்கான பாதுகாப்பு விதிமுறைகள் (திருத்தப்பட்டது) 1980ன் சிறிய மீன்பிடிகலங்களுக்கான வடிவமைப்பு, கட்டுமானம் மற்றும் சாதனங்கள் குறித்த FAO/ILO/IMO தன்னார்வ வழிகாட்டுதல்கள், பணித்தளத்தில் நிறுத்தப்பட்ட 12 மீட்டர் நீளத்துக்குக் குறைவான மீன்பிடி படகுகள் மற்றும் பணிமேடையில் நிறுத்தப்படாத மீன்பிடிகலங்களுக்கான பாதுகாப்பு பரிந்துரைகள் (2010) உள்ளிட்ட பிறவும் இதில் அடங்கியிருக்கின்றன.

நடவடிக்கைகளின் மூலம் அரசுகள் ஆதரவு செயல்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். இந்த நிகழ்வுப் போக்கின் மூலம், (விதிகளுக்குக்) கீழ்ப்படுவதைக் கண்காணிப்பதில் தற்போதிருக்கும் நிறுவனங்கள் மற்றும் சமூக நிறுவனங்களின் பாத்திரம், புள்ளி விவரங்கள் சேகரிப்பது, பயிற்சி – விழிப்புணர்வு, தேடுதல் மற்றும் காப்பாற்றுதல் ஆகியவை அங்கீகரிக்கப்பட வேண்டும். சிறுவீத மீன்பிடிக் கலங்களை கடலில் தேடவும், மீட்கவுமான அவசரகால கண்டுபிடிக்கும் முறையையும் தகவல் பெறுவதற்குமான வாய்ப்புகளையும் அரசுகள் மேம்படுத்த வேண்டும்.

6.18 உணவுப் பாதுகாப்பு சூழ்நிலையைக் கணக்கில்கொண்டு, நிலம் – மீன்வளம் – காடுகள் குறித்த அனுபவ உரிமை பற்றிய பொறுப்பார்ந்த ஆளுகைக்கான தன்னார்வ வழிகாட்டுதல்களின் பிரிவு 25[4] உட்பட கணக்கில் எடுத்துக்கொண்டு, ஆயுத மோதல்கள் நிகழும் சூழலில், சர்வதேச மனித உரிமை சட்டத்தின்படி, சிறுவீத மீன்பிடி பங்காளிகள் அனைவரும் அவர்களின் பாரம்பரிய வாழ்வாதாரத்தைத் தொடரவும், அவர்களின் வழக்கமான மீன்பிடி இடங்களை அணுகவும், அவர்களின் கலாச்சாரத்தையும், வாழ்க்கை முறையைத் தொடரவும் செய்து அவர்களின் மனித உரிமைகளை அனைத்துத் தரப்பாரும் காத்திடல் வேண்டும். அவர்களைப் பாதிக்கும் விவகாரங்களில் முடிவெடுப்பதில் அவர்கள் பங்கெடுப்பதற்கான வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும்.

## 7. மதிப்பு கூட்டும் சங்கிலித் தொடர் நடவடிக்கைகள் – மீன்பிடிக்குப் பிந்தைய நடவடிக்கைகளும் வணிகமும் (VALUE CHAINS, POST-HARVEST AND TRADE)

7.1 மதிப்புக் கூட்டும் நடவடிக்கைகளில் மீன்பிடிக்குப் பிந்தைய நடவடிக்கைகள் அடங்கிய துணைத்துறையில் செயல்படுபவர்கள் ஆற்றும் முக்கியத்துவம் வாய்ந்த பாத்திரத்தை அனைத்து தரப்பினரும் அங்கீகரிக்க வேண்டும். மதிப்புக் கூட்டும் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றவர்கள் மத்தியில் சமனற்ற அதிகார உறவு நிலை நிலவுகிறது என்பதை அங்கீகரித்து, மீன்பிடிக்குப் பிந்தைய நடவடிக்கைகளில் ஈடுபடும் எளிதில் பாதிப்புக்கு ஆளாக கூடிய – ஒதுக்கப்பட்ட பிரிவினருக்கு சிறப்பு ஆதரவு நடவடிக்கைகள் தேவைப்படும் என்பதை உணர்ந்து, முடிவெடுக்கும் நிகழ்வுப் போக்கில் மீன்பிடிக்குப் பிந்தைய செயல்பாட்டாளர்கள் அனைவரும் இணைக்கப்பட வேண்டும் என்பதை அனைத்துத் தரப்பாரும் அங்கீகரிக்க வேண்டும்.

7.2 மீன்பிடிக்குப் பிந்தைய நடவடிக்கைகளில் பெண்கள் பல சமயங்களில் முக்கியத்துவம் வாய்ந்த பாத்திரத்தை மேற்கொள்கின்றனர் என்பதை அனைத்துத் தரப்பாரும் அங்கீகரித்து, பெண்கள் அந்த வேலைகளில் பங்கெடுப்பதை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைளுக்கு ஆதரவு அளிக்க வேண்டும். மீன்பிடிக்குப் பிந்தைய துணைத்துறையில், பெண்கள் தங்கள் வாழ்வாதாரத்தை தக்க வைத்துக்கொள்வதை சாத்தியமாக்கும் வகையில், பெண்களுக்கான சேவைகளும் ஆதரவுகளும் துணைச் சாதனங்களும் கிடைப்பதை அரசு உறுதி செய்ய வேண்டும்.

7.3 சிறுவீத மீன்பிடியின் துணைத்துறையான மீன்பிடிக்குப் பிந்தைய நடவடிக்கைகள், பொறுப்பார்ந்த முறையிலும், நிலைத்த வகையிலும், ஏற்றுமதிக்கும் உள்நாட்டுச் சந்தைக்கும் நல்ல தரமுள்ள, பாதுகாப்பான மீன் மற்றும் மீன் சார் பொருட்களை உற்பத்தி செய்யும் வகைக்கு, அடிக்கட்டுமானம், அமைப்பு கட்டுமானம் திறன் மேம்பாடு நடவடிக்கைகள் ஆகியவற்றில் மூலதனமிடுவதை அரசுகள் செய்யவும் மேம்படுத்தவும், வாய்ப்பான நிலையை உருவாக்கவும் வேண்டும்.

7.4 தேசிய சட்டங்களுக்கு ஏற்ற வகையில், மதிப்புக் கூட்டும் நடவடிக்கைத் தொடரின் அனைத்துக் கட்டங்களிலும், வருமானத்தையும் வாழ்வாதாரப் பாதுகாப்பையும் மேம்படுத்திக்கொள்ளும் வகையில், மீனவர்கள் மற்றும் மீன் தொழிலாளர்களின் பாரம்பரிய சங்கங்களை அங்கீகரிப்பதையும், அவர்களின் அமைப்பு மற்றும் திறன் வளர்ச்சியை மேம்படுத்துவதையும் அரசுகளும் வளர்ச்சிப் பங்காளிகளும் செய்ய வேண்டும். அதற்கு ஏற்றவகையில், சிறுவீத மீன்பிடியின் கூட்டுறவுகள், தொழில்முறை அமைப்புகளை வளர்த்தெடுக்கவும், உருவாக்கவும், சந்தைக் கட்டமைப்பை உருவாக்கவும் ஆதரவு நடவடிக்கைள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

7.5 அனைத்துத் தரப்பினரும் மீன்பிடிக்குப் பிந்தைய இழப்புகள், விரயங்களைத் தவிர்க்க வேண்டும், அத்துடன், மதிப்புக் கூட்டுவதற்கான வழிமுறைகளையும், தற்போதிருக்கும் பாரம்பரிய உள்ளூர் செலவு குறைவான தொழில்நுட்பங்களை, கண்டுபிடிப்புகளை வளர்த்தெடுக்கவும், கலாச்சார ரீதியில் பொருத்தமான தொழில்நுட்ப பகிர்வுகளை உருவாக்கவும் அனைத்து

[4] பிரிவு 25 நிலம் – மீன்வளம் – வனம் தொடர்பான மோதல்கள் என்று தலைப்பிடப்பட்டுள்ளது.

தரப்பினரும் முயற்சிக்க வேண்டும். சுற்றுச்சூழல் ரீதியில் நிலைத் தன்மைகொண்ட நடவடிக்கைகளை உயிர்ச் சூழல் அணுகுமுறைகள் மேற்கொள்வதை முன்னேற்றுவதுடன், சிறுவீத மீன்பிடி கையாளுதல், பதப்படுத்துவதில் உள்ளிடுபொருள் (நீர், விறகு இன்ன பிற) விரயத்தைத் தவிர்ப்பது போன்ற முன் ஜாக்கிரதை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

7.6 சிறுவீத மீன்பிடியின் உற்பத்திப் பொருட்களை சரிநிகரான வகையிலும், பாரபட்சம் இல்லாமலும் உள்ளூர், தேசிய, சர்வதேச சந்தையில் சந்தைப்படுத்துவதற்கான வாய்ப்புகளை அரசுகள் அமைத்துத் தர வேண்டும். பொருத்தமான சமயங்களில், உலக வர்த்தக நிறுவனத்தின் (WTO) கீழான ஒப்பந்தங்களைக் கணக்கில் கொண்டு, உலக வர்த்தக நிறுவன உறுப்பினர்களின் உரிமைகள் – கடமைகளை சிந்தையில் கொண்டு, குறிப்பாக, சிறுவீத மீன்பிடி பண்டங்களுக்கு பிராந்திய வணிகத்தில் ஆதரவு அளிக்கும் கட்டுப்பாடுகள், நடைமுறைகளைக் கொண்டுவருவதற்கு அரசுகள் ஒத்துழைத்துப் பணியாற்ற வேண்டும்.

7.7 சர்வதேச வணிகம் மீன் மற்றும் மீன் பண்டங்கள் மீது ஏற்படுத்தும் தாக்கம் குறித்தும், உள்ளூர் சிறுவீத மீனவர்கள், மீன் தொழிலாளர்கள் மற்றும் அவர்களின் சமூகம் செங்குத்து நோக்கில் (அதாது உலக நிலைமையுடன்) ஒருங்கிணைக்கப்படுவது குறித்தும் அரசுகள் உரிய கவனம் செலுத்த வேண்டும். சர்வதேச மீன் வணிகத்தை மேம்படுத்துவதையும், அதேசமயம், சத்துணவுக்கான மீனைச் சார்ந்துள்ள, மீன்தான் அவர்களின் சரிவிகித உணவிற்கு ஆதாரம் என்றான, மீனுக்கு ஒப்பிடக்கூடிய இதர சத்துணவுகள் கிடைக்க வாய்ப்பில்லாத மக்களின் தேவைகள், அவர்களின் நல்வாழ்க்கை ஏற்றுமதியால் பாதகமான வகையில் பாதிக்கப்படாதிருப்பதையும் அரசுகள் உறுதி செய்ய வேண்டும்.

7.8 சர்வதேச வணிகத்தால் கிடைக்கும் பலன்கள் நியாயமான வகையில் பிரித்தளிக்கப்பட வேண்டும் என்பதை அரசுகளும், சிறுவீத மீன்பிடி செயல்பாட்டார்களும் இதர மதிப்புக் கூட்டும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளவர்களும் அங்கீகரிக்க வேண்டும். மீன் வள ஆதாரங்களின் நிலைத் தன்மையையும், உணவுப் பாதுகாப்பையும் சத்துணவையும் சந்தையின் தேவைகள் மிகையாக சுரண்டப்படுவதைத் தடுப்பதற்கான பலன் தரும் மீன்வள மேலாண்மைமுறை இருப்பதை அரசுகள் உறுதி செய்ய வேண்டும். அதுபோன்ற மீன்வள மேலாண்மை முறைகள், பொறுப்பார்ந்த மீன்பிடிக்குப் பிந்தைய நடைமுறைகள், மதிப்புக் கூட்டும் நடவடிக்கை தொடரில் இருக்கும் சிறுவீத மீனவர்கள், மற்றும் பிறருக்கு ஏற்றுமதி வருவாயின் பலன் சரிநிகராகச் சென்று சேருவதைச் சாத்தியமாக்கும் கொள்கைகள், நடவடிக்கைகள் உள்ளிட்டவற்றை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.

7.9 சுற்றுச்சூழல், சிறுவீத மீன்பிடி கலாச்சாரம், உணவுப் பாதுகாப்பு தொடர்பான சிறப்புத் தேவைகள் ஆகியவற்றின் மீது, சர்வதேச வணிகத்தின் எதிர்மறைத் தாக்கங்கள் நியாயமான வகையில் எதிர்கொள்ளப்படுவதை உறுதி செய்வதற்கு, சுற்றுக்சூழல், சமூகம் மற்றும் பிற பொருத்தமான மதிப்பீடுகள் உள்ளிட்ட கொள்கைகள் நடைமுறைகளை அரசுகள் மேற்கொள்ள வேண்டும். இந்த கொள்கைகள் மற்றும் நடைமுறைகளின் ஒரு பகுதியாக சம்பந்தப்பட்ட பங்காளிகளுடன் கலந்தாலோசனை செய்வது இருக்க வேண்டும்.

7.10 சிறுவீத மீன்பிடியின் மதிப்புக் கூட்டும் செயல்பாடுகளில் உள்ள அனைத்து பங்காளிகளுக்கும் பொருத்தமான சந்தை தகவல்களும் வணிகத் தகவல்களும் கிடைப்பதற்கான வாய்ப்பான சூழலை அரசுகள் உருவாக்க வேண்டும். மாறிவரும் சந்தை நிலைமைகளுக்கு ஏற்ப தம்மைச் சரிசெய்துகொள்வதற்குத் தேவையான சந்தை தகவல்களை உரிய நேரத்தில், மிகவும் சரியாக சிறுவீத மீன்பிடி பங்காளிகள் தெரிந்துகொள்ளும் வாய்ப்பு இருக்க வேண்டும். உலகச் சந்தை மற்றும் உள்ளூர் நிலைமைகளின் வாய்ப்புகள் மூலம், சிறுவீத மீன்பிடியின் பங்காளிகள் அனைவரும், குறிப்பாக, பெண்கள், மற்றும் பிற எளிதில் பாதிக்கப்பட வாய்ப்புகள் பிரிவினர், ஒதுக்கப்பட்ட பிரிவினர் தங்களைத் தகவமைத்துக்கொள்ளவும், நியாயமான பலன்களை பெறவும், ஏற்பட வாய்ப்புள்ள பாதக விளைவுகளைக் குறைத்துக்கொள்ளவும் அவர்களுக்கான திறன் மேம்பாட்டை அளிப்பது தேவையானதாக இருக்கிறது.

## 8. பாலின சமத்துவம்
(GENDER EQUALITY)

8.1 அனைத்துத் தரப்பினரும் சேர்ந்து முயற்சிப்பதும் சிறுவீத மீன்பிடியின் அனைத்து வளர்ச்சி நடவடிக்கை செயல்முறைகளின் ஒருங்கிணைந்த பகுதியாக பாலின வேறுபாடுகளை இனம் கண்டு செயல்படும் கொள்கைகள் இருப்பதும் தேவையானதாக இருக்கிறது என்பதை அங்கீகரிக்க வேண்டும். மாறுபட்ட கலாச்சார பின்புலங்களில், பாலின சமத்துவத்திற்கான இந்த செயல்முறைகள் மாறுபட்ட அணுகுமுறைகளைக் கோருகின்றன. மேலும், பெண்களுக்கு எதிரான பாரபட்சம் காட்டும் அனைத்து நடைமுறைகளையும் பாலினக்

கொள்கை சவாலுக்கு அழைக்க வேண்டும்.

8.2 CEDAW, உள்ளிட்ட, இன்ன பிறவற்றையும் உள்ளடக்கிய சர்வதேச மனித உரிமை சட்டங்கள்படியும் தாங்கள் கையெழுத்திட்டுள்ள பொருத்தமுள்ள பிற சட்ட உருக்களின் படியும், பெய்ஜிங் பிரகடனம் & செயல்பாட்டுக்கான மேடையைக் கருத்தில் கொண்டும் அரசுகள் தங்களுக்கான கடப்பாடுகளுக்குக் கீழ்பட வேண்டும். சிறுவீத மீன்பிடியை இலக்காகக் கொண்ட கொள்கைகளை உருவாக்குவதற்கான முடிவெடுக்கும் நிகழ்வுப் போக்கில் பெண்கள் சம எண்ணிக்கையில் பங்கெடுப்பதை உறுதி செய்வதற்கான முயற்சிளை அரசுகள் மேற்கொள்ள வேண்டும். பெண்களுக்கான வெளியை உருவாக்கும்போது, குறிப்பாக, பெண் மீன் தொழிலாளர்கள் மற்றும் அவர்களின் அமைப்பை பங்கெடுக்கவும் கண்காணிப்பதற்காகவும் உருவாக்கும்போது, பெண்களுக்கு எதிரான பாரபட்சத்தை எதிர்கொள்ள அரசுகள் குறிப்பான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். மீன்வள நிறுவனங்களில் பெண்கள் பங்கெடுப்பதை ஊக்குவிக்க வேண்டும், அத்துடன், பொருத்தமான வகையில் அமைப்பு மேம்பாட்டுக்கான ஆதரவும் அளிக்கப்பட வேண்டும்.

8.3 பாலின சமத்துவத்தை யதார்த்தமாக்குவதற்கான கொள்கைகளையும் சட்டங்களையும் அரசுகள் நிறுவ வேண்டும். மேலும், பொருத்தமான வகையில், சமூக, பொருளாதார, கலாச்சார அம்சங்களைக் கணக்கில் எடுத்துக்கொண்டு, பாலின சமத்துவத்திற்கு ஏற்பில்லாத சட்டங்கள், கொள்கைகள் மற்றும் நடவடிக்கைகளை மாற்றியமைக்கவும் வேண்டும். விரிவாக்கப் பணியாளர்களாக ஆண்களையும் பெண்களையும் பணிக்கமர்த்துவது, ஆண்களுக்கும் பெண்களுக்கும், மீன்வளம் தொடர்பான சட்ட சேவை உட்பட, விரிவாக்கச் சேவைகளும் தொழில்நுட்ப சேவைகளும் கிட்டும்படி செய்வது ஆகியவற்றையும் இன்ன பிறவற்றையும் உள்ளடக்கி பாலின சமத்துவத்தை நடைமுறைபடுத்துவதின் முன்னணியில் அரசு செயல்பட வேண்டும். பெண்களின் நிலையை முன்னேற்றுவதிலும், பாலின சமத்துவத்தை எட்டுவதிலும் சட்டம், கொள்கைகள், நடைமுறைகளின் தாக்கம் என்னவென்று மதிப்பிட செயல்படும் மதிப்பீட்டு அமைப்பொன்றை வளர்த்தெடுக்க அனைத்துத் தரப்பினரும் கூட்டாகச் செயல்பட வேண்டும்.

8.4 முக்கியத்துவம் வாய்ந்தவையும் சிறுவீத மீன்பிடிப் பெண்களுக்குப் பொருந்திப் போவதுமான, அத்துடன் சிறந்த தொழில்நுட்பங்களை வளர்த்தெடுக்க அனைத்து தரப்பினரும் ஊக்கம் அளிக்க வேண்டும்.

## 9. பேரழிவு அபாயமும் பருவநிலை மாற்றமும் (DISASTER RISKS AND CLIMATE CHANGE)

9.1 ஐக்கிய நாடுகளின் நிலைத்த வளர்ச்சி குறித்த மாநாட்டு (United Nations Conference on Sustainable Development-Rio+20) ஆவணம் நாம் விரும்பும் எதிர்காலம் (“The future we want”) என்பதைக் கணக்கில் கொண்டு, ஐக்கியநாடுகளின் பருவநிலை மாற்றம் குறித்த மாநாட்டின் கருத்துக் கட்டமைப்பின் (United Nations Framework Convention on Climate Change - UNFCCC) நோக்கங்கள், கோட்பாடுகள், மற்றும் வாசகங்களுக்கு ஒப்ப நிலைத்த சிறுவீத மீன்பிடி என்ற சூழல் உட்பட, பருவநிலை மாற்றத்தை எதிர்த்துப் போராடுவதை அரசுகள் அங்கீகரிக்க வேண்டும்.

9.2 மனித செயல்பாடுகளால் தூண்டப்பட்ட பேரழிவுகளும், இயற்கை பேரழிவுகளும், பருவநிலை மாற்றமும் சிறுவீத மீன்பிடியின் மீது வேறுபட்ட தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்பதை அனைத்துத் தரப்பினரும் அங்கீகரிக்க வேண்டும். நிலைமைக்கேற்ப, தகவமைத்துக்கொள்ளுதல், எதிர்த்துப் போராடுதலுக்கான குறிப்பான செயல் திட்டங்கள், அதுபோல, மீண்டுவரும் தன்மையைக் கட்டமைத்தல் போன்றவை, உள்ளூர் மக்கள், ஆண்கள் – பெண்கள், அத்துடன் எளிதில் பாதிப்புக்கு ஆளாகக் கூடிய பிரிவினர் மற்றும் ஒதுக்கப்பட்ட பிரிவினருக்கு குறிப்பான கவனம் செலுத்தி, முழுமையான மற்றும் பலன் தரும் வகையில் அவர்களுடன் கலந்தாலோசித்து, மீன்வளத்துறையில் பருவநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்கான கொள்கைகளையும் திட்டங்களையும் அரசுகள் வளர்த்தெடுக்க வேண்டும். பருவநிலை மாற்றத்தின் காரணமாக, உணவுப் பாதுகாப்பு, குடியிருப்பு, வாழ்வாதாரம் என்ற அம்சங்களில் குறிப்பான வகையில் பாதிப்புக்கு ஆளாக கூடிய, சிறு தீவுகளில் வாழ்கின்ற மக்களுக்கு சிறப்பு ஆதரவினை அளிக்க வேண்டும்.

9.3 சிறுவீத மீன்பிடியில் ஏற்படக்கூடிய பேரழிவு அபாயத்தையும் பருவநிலை மாற்றத்தையும் எதிர்கொள்ள ஒருங்கிணைந்த அனைத்தையும் உள்ளடக்கிய, துறைகளுக்கிடையான கூட்டு நடவடிக்கைகளையும் உள்ளடக்கிய அணுகுமுறை தேவை என்பதை அனைத்துத் தரப்பினரும் அங்கீகரிக்க வேண்டும். மாசுபாடு, மீன்பிடி அல்லாத நடவடிக்கைகளால் மனிதர்கள் உருவாக்கிய கடற்கரை அரிப்பு கடற்கரை வாழிடங்கள் அழிவு போன்ற பிரச்சனைகளை எதிர்கொள்ள அரசுகளும் பொருத்தமான

தரப்பினரும் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். மேற்சொன்னது போன்ற பிரச்சனைகள் மீனவ சமூகத்தினரின் வாழ்வாதாரத்தைப் பாரதூரமாக சிதைப்பதுடன், ஏற்பட வாய்ப்புகள் பருவநிலை மாற்றத்தை அவர்கள் எதிர்கொள்வதற்கான திறனையும் சீரழித்துவிடுகிறது.

9.4 பருவநிலை மாற்றம் அல்லது இயற்கையான பேரழிவுகளாலும் மனிதர்களால் உருவாக்கப்பட்ட பேரழிவுகளாலும் சிறுவீத மீன்பிடி சமூகத்தினருக்கு, தகவமைத்துக்கொள்ளுதல், எதிர்கொள்ளுதல், உதவித் திட்டங்கள் என பொருத்தமான முறையில் ஆதரவளித்து உதவி செய்வதை அரசுகள் கருத்தில் கொள்ள வேண்டும்.

9.5 சிறுவீத மீன்பிடியைப் பாதிக்கும் வகையில் மனிதர்களால் பேரழிவு ஏற்படுத்தப்பட்டால் சம்பந்தப்பட்ட தரப்பினர் அதற்குப் பொறுப்பாக்கப்பட வேண்டும்.

9.6 மீனினங்கள் கிடைப்பதில் மாற்றம் ஏற்படுவது, மீன் பிடிபடுவது மாறுவது, மீனின் தரம் மற்றும் சேமித்து வைக்கும் காலம், சந்தைகளில் மாற்றம் போன்ற காரணங்களால் மீன்பிடிக்குப் பிந்தைய துறைகளும் வணிக உப துறையும் பருவநிலை மாற்றத்தாலும் பேரழிவுகளாலும் பாதிப்புக்கு ஆளாகும் என்பதை அனைத்துத் தரப்பினரும் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். பாதகமான விளைவுகளைக் குறைப்பதற்காக, சிறுவீத மீன்பிடி பங்காளிகளுக்கு சரிக்கட்டும் நடவடிக்கைகளை அரசுகள் அளிக்க வேண்டும். புதிய தொழில்நுட்பங்கள் அறிமுகப்படுத்தப்படும்போது, மீனினங்கள் கிடைப்பதில் மாற்றம், பண்டங்கள் மாற்றம், சந்தைகள் மாற்றம் போன்ற எதிர்கால மாற்றங்களையும் பருவநிலை மாற்றத்தையும் எதிர்கொள்வதற்காக அவை நெகிழ்வுத் தன்மை கொண்டவையாகவும் தகவமைப்பு மாற்றம் செய்யப்பட வாய்ப்புள்ளவையாகவும் இருக்க வேண்டும்.

9.7 அவசரநிலைக்குப் பதில்வினையாற்றலும், பேரிடர் தயார் நிலையும் சிறுவீத மீன்பிடிக்கு எவ்வகையில் தொடர்புள்ளவை என்பதை அரசுகள் புரிந்துகொள்வதுடன், தொடர்ச்சியான, இடைவிடாத நிவாரண வளர்ச்சி என்ற (relief-development continuum) கருத்தாக்கத்தை நடைமுறைபடுத்த வேண்டும். நிவாரண கட்டம், மறுவாழ்வு நடவடிக்கைகள், மறுகட்டுமானம், மீட்சி காலகட்டங்கள் உள்ளிட்ட நடவடிக்கைகள், எதிர்காலத்தில் நிகழ வாய்ப்புள்ள அபாயங்களைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளையும் கொண்டவையாக அவசர நிலையை அடுத்த நீண்டகால வளர்ச்சியின் நோக்கங்கள் இருக்க வேண்டும். இருந்ததைவிடச் சிறப்பாக மீண்டும் கட்டுதல் (building back better) என்ற கருத்தாக்கத்தை பேரழிவுக்குப் பிந்தைய பணிகளிலும் மறுவாழ்வின் போதும் பின்பற்ற வேண்டும்.

9.8 பருவநிலை மாற்றம் தொடர்பான முயற்சிகளின் போது, சிறுவீத மீன்பிடியின் பாத்திரத்தை மேம்படுத்துவதை அனைத்துத் தரப்பினரும் மேற்கொள்வதுடன், இந்த துணை பிரிவில், அதன் அனைத்து மதிப்புக் கூட்டு நடவடிக்கைகளிலும் – மீன்பிடி, மீன்பிடிக்குப் பிந்தைய – சந்தை – விநியோகம் என்று அனைத்திலும் சக்தியைத் திறன் வாய்ந்த முறையில் கையாளுவதைச் உறுதி செய்ய வேண்டும்.

9.9 வெளிப்படைத் தன்மை மிகுந்த அளவில் இருக்கும்படி தகவமைத்துக் கொள்வதற்கான நிதி, வசதிகள் அவற்றுடன் / அல்லது பொருத்தமான வகையில் பருவநிலை மாற்றத்திற்குத் தகவமைத்துக்கொள்ளும் தொழில்நுட்பத்தை சிறுவீத மீன்பிடிச் சமூகங்களுக்கு கிடைக்க வகை செய்வது பற்றி அரசுகள் பரிசீலிக்க வேண்டும்.

# பகுதி 3:

# ஆற்றல் மிகு சூழலை உறுதி செய்வதும் அமலாக்கத்திற்கு ஆதரவு தருவதும் (ENSURING AN ENABLING ENVIRONMENT AND SUPPORTING IMPLEMENTATION)

## 10. கொள்கை ஒத்திசைவுகளும் நிறுவன ஒருங்கிணைப்பும் சேர்ந்து பணியாற்றுதலும் (POLICY COHERENCE, INSTITUTIONAL COORDINATION AND COLLABORATION)

10.1 இன்ன பிறவற்றுடன், தேசிய சட்டங்கள், சர்வதேச மனித உரிமைகள் சட்டம், தொல்குடிகள் தொடர்பான இதர சர்வதேச சட்டப் பத்திரங்கள், பொருளாதார வளர்ச்சிக் கொள்கைகள், சக்தி–கல்வி – மருத்துவம்– கிராமப்புரக் கொள்கைகள், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, உணவுப் பாதுகாப்பு சத்துணவுக் கொள்கைகள், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புக் கொள்கைகள், வணிக கொள்கைகள், பேரிடர் அபாய மேலாண்மை, பருவநிலை மாற்றத்திற்குத் தகவமைத்துக்கொள்வது குறித்த கொள்கைகள், மீன் வளத்தை அணுகுவதற்கான கொள்கைகள், சிறுவீத மீன்பிடி சமூகத்தின் அனைத்தும் தழுவிய வளர்ச்சியை மேம்படுத்துவதற்கான இதர மீன்வளக் கொள்கைகளும், நடவடிக்கைளும், முதலீடும் உள்ளிட்ட இன்ன பிறவற்றையும் உள்ளடக்கிய கொள்கை ஒத்திசைவை நோக்கிப் பணி செய்ய வேண்டியதின் அவசியத்தை அரசுகள் அங்கீகரிக்க வேண்டும்.

10.2 சிறுவீத மீன்பிடியின் நலன்களையும் ஒருங்கிணைந்த கடற்கரை மேலாண்மையின் பாத்திரத்தையும் சரியான முறையில் கணக்கெடுத்துக்கொள்ளும், பொருத்தமான வகையில் உள்நாடு மற்றும் கடல்பரப்பு இடஞ்சார்ந்த திட்டமிடல் (Spatial Planning)[5] முறையை வளர்த்தெடுத்து மேற்கொள்வதை அரசுகள் செய்ய வேண்டும். கலந்தாலோசனைகள், பங்கேற்பு, பிரபலப்படுத்துதல் ஆகியவற்றின் மூலம் இடஞ்சார்ந்த திட்டமிடலுக்கான நுட்ப உணர்வுள்ள கொள்கைகளும், சட்டங்களும் பொருத்தமான வகையில் உருவாக்கப்பட வேண்டும். பாரம்பரிய அனுபவ உரிமைகளுடனும், தங்களுக்குள்ளான நடைமுறையின்படி முடிவெடுக்கும் நிகழ்வுப் போக்கையும் உட்கொண்டு, சிறுவீத மீன்பிடிச் சமூகங்கள் மற்றும் பிற சமூகங்கள் பயன்படுத்துகிற பரப்பிற்கான வளர்ச்சி முறைகள் குறித்து, எங்கெல்லாம் பொருத்தமாக இருக்கிறதோ அங்கெல்லாம், முறைமையான திட்டமிடல் அமைப்புகள் பரிசீலனை செய்ய வேண்டும்.

10.3 கடல் பரப்பு மற்றும் உள்நாட்டு நீர்பரப்புகள், உயிர்ச்சூழல்கள் ஆகியவற்றின் மீது தாக்கத்தை ஏற்படுத்தும் கொள்கைகள் ஒத்திசைந்து செல்பவையாக இருப்பதை உறுதி செய்யவும்; மீன் வளம், விவசாயம், மற்றும் பிற இயற்கை வள ஆதாரங்கள் தொடர்பான கொள்கைகள் ஒன்று சேர்ந்து, இந்த துறைகளினால் பெறப்படும் ஒருங்கிணைந்த வாழ்வாதாரங்களை மேம்படுத்துவதை உறுதி செய்யும் அரசுகள் குறிப்பான கொள்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

10.4 மீன்வளக் கொள்கைகள், உயிர்ச்சூழல் அணுகுமுறையைப் பயன்படுத்தி, நிலைத்த சிறுவீத மீன்பிடிக்கும் பட்டினி – வறுமையை ஒழிப்பதற்கும் தொலைநோக்குப் பார்வை அளிப்பதை அரசுகள் உறுதி செய்ய வேண்டும். எளிதில் பாதிப்புக்கு ஆளாக கூடிய பிரிவினர் மற்றும் ஒதுக்கப்பட்ட பிரிவினருக்குக் குறிப்பான கவனம் செலுத்தும் சிறுவீத மீன்பிடிக்கும் மனித உரிமைகளுக்குமான தொலைநோக்குப் பார்வைக்கும் கொள்கை கட்டமைப்புக்கும் ஒத்திசைந்து போவதாக மீன்வளத்துக்கான கொள்கை கட்டமைப்பு அமைய வேண்டும்.

---

[5] 1983ல் பிராந்தியதிட்டமிடலுக்கான ஐரோப்பிய அமைச்சர்களின் மாநாடு (European Conference of Ministers responsible for Regional Planning (CEMATE) அளித்தவரைவிலக்கணம்: சமூகத்தின் பொருளாதார, சமூக, கலாச்சார மற்றும் உயிர்ச்சூழல் கொள்கைகளுக்கு பிராந்திய / இடஞ்சார்ந்த திட்டமிடல்பூகோளவியல் அர்த்தத்தை வழங்குகிறது. அதே சமயம், அதுஓர் அறிவியல் துறையாகவும். நிர்வாக தொழில் நுட்பமாகவும், சமச்சீரான பிராந்திய வளர்ச்சி மற்றும் ஒட்டுமொத்த செயல்முறையின் இடஞ்சார்ந்த இயல்பான அமைப்பாக பல்துறைச்சார்ந்ததாக உள்ள ஒருங்கிணைந்த அணுகுமுறையாகும் (மொழிபெயர்ப்பாளர்)

10.5 கொள்கை ஒத்திசைவு, துறைகளுக்கிடையிலான கூட்டுச் செயல்பாடு, அவற்றுடன், மீன்வளத்துறையில் அரவணைத்துச் செல்கின்ற, அனைத்தையும் தழுவிய உயிர்ச்சூழல் அணுகுமுறையை அடைவதற்குத் தேவையான நிறுவன கட்டமைப்பையும், உள்ளூர் – தேசிய – பிராந்திய – உலகளாவிய உள்ளிணைப்புகள் – வலைப்பின்னல் அமைப்புகள் உட்பட, உள்ளிணைப்புகளையும் அரசுகள் உருவாக்கவும் மேம்படுத்தவும் வேண்டும். அதேசமயம், இவற்றிற்கு யார் பொறுப்பில் உள்ளவர் என்பது தெள்ளத் தெளிவாக இருப்பதும், சிறுவீத மீன்பிடிச் சமூகத்தினர் எந்த அரசு அதிகாரியைத் தொடர்புகொள்ள வேண்டும் என்பது தெளிவாக இருப்பதும் அவசியமானதாகும்.

10.6 சிறுவீத மீன்பிடி பங்காளிகள், மீன்வள கூட்டுறவுகள், சமூக அமைப்புகள் உட்பட அனைத்து தொழில்முறை சங்கங்களும் கூட்டாகச் செயல்படுவதை மேம்படுத்த வேண்டும். அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ளவும்; சிறுவீத மீன்பிடிக்குப் பொருத்தமுள்ள கொள்கைகள் – முடிவெடுக்கும் நிகழ்வுப் போக்கில் பங்கெடுப்பதற்கு உதவும் வகையிலும் வலைப்பின்னல் அமைப்புகளையும் மேடைகளையும் அவர்கள் உருவாக்க வேண்டும்.

10.7 தேசிய சட்டங்களுக்கு ஏற்ற வகையில், உயிர்ச்சூழல் அணுகுமுறையைக் கணக்கில் கொண்டு, சிறுவீத மீன்பிடியை பலன் தரும் வகையில் மேலாண்மை செய்வதற்கு உள்ளாட்சி அமைப்புகள் பங்களிப்பு செய்வதை, பொருத்தமான முறையில், அரசுகள் அங்கீகரிக்கவும் மேம்படுத்தவும் வேண்டும்.

10.8 சிறுவீத மீன்பிடியின் எதிர்காலத்தைப் பாதுகாப்பதற்காக, மேம்பட்ட சர்வதேச – பிராந்திய – துணைப் பிராந்திய ஒத்துழைப்புகளை அரசுகள் கட்டியெழுப்ப வேண்டும். சிறுவீத மீன்பிடி பற்றிய புரிதலை மேம்படுத்திக்கொள்வதற்கான திறன் மேம்பாட்டினையும், பொருத்தமானதும், இருதரப்பாரும் ஒப்புக்கொள்ளும் தொழில்நுட்ப பரிவர்த்தனை உட்பட – துணைப் பிராந்திய, பிராந்திய, அல்லது சர்வதேச கூட்டுறவுகள் தேவையானபோது இந்த துணைத் துறைக்கு உதவி செய்யவும் அரசுகளும், அதுபோலவே, சர்வதேச, பிராந்திய, துணை பிராந்திய அமைப்புகளும் ஆதரவு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

## 11. தகவல்களும் ஆய்வுகளும் செய்தித் தொடர்பும்

(INFORMATION,RESEARCH AND COMMUNICATION)

11.1 உயிர்ச்சூழலின் நிலைத்த தன்மையை உறுதிப்படுத்திக்கொள்ளும் நோக்கத்துடன், சிறுவீத மீன்பிடி குறித்த முடிவெடுப்பதற்கான புள்ளிவிவரங்கசை் சேகரிக்கும் நோக்கத்துடன், உயிர்ச்சூழல் – அவற்றில் வாழும் உயிர்கள் (bioecological), கலாச்சாரம், பொருளாதாரம் உள்ளிட்ட மீன்வள புள்ளிவிவரங்களை, வெளிப்படைத் தன்மையுடன், சேகரிக்கும் அமைப்பு ஒன்றினை அரசுகள் நிறுவிட வேண்டும். பாலின விவரங்களைப் பிரித்துக்காட்டும் வகையிலும், அதுபோல, சமூக – பொருளாதார அம்சங்கள் உட்பட, சிறுவீத மீன்பிடியின் முக்கியத்துவத்தின் காட்சித் தோற்றமும், அது பற்றிய புரிதலும் மேம்படும் வகையிலும் புள்ளிவிவரங்களை முன்வைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

11.2 பலன் தரும் முடிவுகள் எடுப்பதற்குத் தேவையான தகவல்தொடர்பு மற்றும் தகவல்களின் முக்கியத்துவத்தை அனைத்து பங்காளிகளும் சிறுவீத மீன்பிடிச் சமூகத்தினரும் அங்கீகரிக்க வேண்டும்.

11.3 சிறுவீத மீன்பிடிச் சமூகத்தினரின் பொருத்தமான பங்கேற்புடனும் அவர்களுடன் தகவல் தொடர்பு கொள்வதன் மூலமும், குறிப்பாக அதிகரித்துச் செல்லும் வெளிப்படைத் தன்மையின் காரணமாக, ஊழலை ஒழிக்கவும், முடிவெடுக்கும் இடத்தில் உள்ளவர்களைப் பொறுப்புள்ளவர்களாக ஆக்கவும், பாரபட்சமற்ற முடிவுகள் எடுக்கப்படுவதை உறுதி செய்யவும் அரசுகள் பாடுபட வேண்டும்.

11.4 சிறுவீத மீன்பிடிச் சமூகத்தினர் அறிவானவர்கள், அறிவளிப்பவர்கள், அறிவைப் பெற்றுக்கொள்பவர்கள் என்பதை அனைத்துத் தரப்பினரும் அங்கீகரிக்க வேண்டும். சிறுவீத மீன்பிடிச் சமூகத்தினர் தற்போதைய பிரச்சனைகளுக்கு ஈடுகொடுக்கவும், அவர்களின் வாழ்வாதாரங்களை மேம்படுத்திக்கொள்ளும் ஆற்றலுள்ளவர்கள் ஆக்கவும் அவர்களும் அவர்களின் அமைப்புகளும் பொருத்தமுள்ள தகவல்களை அணுகுவதற்கான தேவையிருக்கிறது என்பதைப் புரிந்துகொள்வது குறிப்பான முக்கியத்துவம் உடையதாகும். தற்போது சமூகங்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளையும், மீன்வளம் மற்றும் வாழ்வாதாரம் தொடர்பான உயிரியல், சட்ட, பொருளாதார, சமூக, கலாச்சார கரிசனங்களைச் சார்ந்ததாக, எவ்வகைத் தகவல்கள் தேவை என்பது அமையும்.

11.5 சட்ட விரோதமானதான ஆவணப்படுத்தப்படாத, கட்டுப்படுத்தப்படாத மீன்பிடி (illegal, unreported and unregulated - IUU) பற்றிய தகவல்கள் உட்பட, பொறுப்பார்ந்த சிறுவீத மீன்பிடிக்கும் நிலைத்த வளர்ச்சிக்கும் தேவையான தகவல்களை அளிப்பதை அரசுகள் உறுதி செய்ய வேண்டும். பேரிடர் அபாயம், பருவநிலை மாற்றம், எளிதில் பாதிப்புக்கு ஆளாக வாய்ப்புள்ள பிரிவினர் மற்றும் ஒதுக்கப்பட்ட பிரிவினரின் சூழலுக்கு குறிப்பான கவனம் செலுத்துகிற வாழ்வாதாரம் மற்றும் உணவுப் பாதுகாப்பு உள்ளிட்டவற்றிற்கும் இன்ன பிறவற்றிற்கும் தொடர்புள்ளவையாக அது இருக்க வேண்டும். புள்ளிவிவரங்கள் குறைவாக உள்ள சூழலில் குறைவான புள்ளிவிவரங்கள் தேவையுள்ள தகவல் தொடர்பு முறைமை ஏற்படுத்தப்பட வேண்டும்.

11.6 தொல்குடிகள் உள்ளிட்ட, சிறுவீத மீனவ சமூகங்களின் அறிவு, கலாச்சாரம், நடைமுறைகள் அங்கீகரிப்பதை அனைத்துத் தரப்பினரும் உறுதி செய்வதுடன், பொறுப்பார்ந்த உள்ளாட்சிக்கும் நிலைத்த வளர்ச்சி நிகழ்வுப் போக்கிற்கும் அவர்களே உயிர்ப்பளிக்கிறார்கள் என்பதையும் அங்கீகரித்து, பொருத்தமான முறையில் ஆதரவளிக்க வேண்டும். மீனவப் பெண்களின் குறிப்பான அறிவும் மீனவத் தொழிலாளர்களின் குறிப்பான அறிவும் அங்கீரிக்கப்பட்டு ஆதரவு அளிக்கப்பட வேண்டும். நிலைத்த வகையில் மீன்வளத்தைப் பேணுவதிலும், மேலாண்மை செய்வதிலும் வளர்த்தெடுப்பதிலும் பொருத்தப்படுவதற்காக பாரம்பரிய மீன்பிடியின் அறிவையும் தொழில்நுட்பங்களையும் அரசுகள் ஆய்வு செய்து ஆவணப்படுத்த வேண்டும்.

11.7 தொல்குடிகள், பெண்கள், பிழைப்புக்காக மீன்பிடியை நம்பியிருப்போர் ஆகியோருக்குக் குறிப்பாகவும், பொதுவாக சிறுவீத மீனவச் சமூகத்தினருக்கும், அவர்கள், தங்கள் நீர் உயிரி ஆதாரங்கள், மீன்பிடி தொழில் நுட்பங்கள் குறித்த பாரம்பரிய அறிவை, அமைப்பாக்கிக்கொள்ளவும், நிலைநிறுத்திக் கொள்ளவும், பரிமாற்றம் செய்துகொள்ளவும் மேம்படுத்திக்கொள்ளவும்; நீருயிர்ச் சூழல் குறித்த அறிவை மேம்படுத்திக்கொள்ளவும், பொருத்தமான வகையில், தொழில்நுட்ப மற்றும் நிதி உதவி உள்ளிட்டவற்றை அளித்து அரசுகளும் இதர பொருத்தமான தரப்பினரும் ஆதரவு அளிக்க வேண்டும்.

11.8 சமூக அளவிலும், தேசிய அளவிலும், துணைப்பிராந்திய மற்றும் பிராந்திய அளவிலும் மேடைகளையும் வலைப்பின்னல் அமைப்புகளையும் உருவாக்கி அல்லது தற்போதுள்ளவற்றைப் பயன்படுத்தி, எல்லைகள் கடந்த நீரியல் வள ஆதாரங்கள் உள்ளிட்ட தகவல்களை, செங்குத்து நோக்கிலும், கிடைமட்ட போக்கிலும் இரண்டு பக்கமுமாக கிடைக்கச் செய்வத்தையும், பரப்புவதையும் பரிமாறிக்கொள்வதையும் அனைத்துத் தரப்பினரும் மேற்கொள்ள வேண்டும். சமூக – பண்பாட்டுப் பரிமாணங்களையும் கணக்கில் எடுத்துக்கொண்டு, பொருத்தமான அணுகுமுறைகளைப் பயன்படுத்தி சிறுவீத மீன்பிடி சமூகத்தினருடன் தகவல் தொடர்பு கொள்ளவும் அவர்களின் திறன்களை மேம்படுத்தவும் வேண்டும்.

11.9 சிறுவீத மீன்பிடி குறித்த ஆய்வு, கூட்டு மற்றும் பங்கேற்பு புள்ளிவிவர சேகரிப்பு, ஆய்வுக்கான நிதி கிடைப்பதை அரசுகளும் பிற தரப்பினரும் உறுதி செய்வதுடன் ஆய்வுகளுக்கு ஊக்கம் அளிக்க வேண்டும். இத்தகைய ஆய்வில் இருந்து பெறப்பட்ட அறிவினை முடிவெடுக்கும் நிகழ்வுப் போக்குடன் இணைப்பதற்கு அரசுகளும் இதரத் தரப்பினர் பாடுபட வேண்டும். சிறுவீத மீன்பிடிச் சமூகத்தினர் ஆய்வுகளில் பங்கெடுப்பதற்கும், ஆய்வு முடிவுகளைப் பயன்படுத்திக் கொள்வதற்கும் வாய்ப்பளிக்கும் வகையில், ஆய்வு நிறுவனங்களும், இதர நிறுவனங்களும் அச்சமூகத்தின் திறன் மேம்பாட்டு ஆதரவு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். DRM மற்றும் CCA கரிசனங்கள் உட்பட, நிலைத்த வள ஆதார பயன்பாடு, உணவு மற்றும் சத்துணவுப் பாதுகாப்பு, வறுமை ஒழிப்பு, சரிநிகர் வளர்ச்சி ஆகியவற்றில் சிறுவீத மீன்பிடியின் பாத்திரம் குறித்து கவனம் குவிக்கும் கலந்தாலோசனை நிகழ்வுப் போக்கின் மூலம் ஆய்வு முன்னுரிமைகள் எவை என்பது பற்றிய பொதுப்புரிதல் எட்டப்பட வேண்டும்.

11.10 மீன்பிடியில் உள்ள ஆண்களும் பெண்களும் சரிநிகர் பலன்களைப் பெறுவதற்கான செயல் திட்டங்களுக்கு உயிரூட்டம் அளிப்பதற்காக, புலம்பெயரும் தொழிலாளர்கள் மற்றும் மீன் தொழிலாளர்களின் பணி நிலைமைகள், அத்துடன், பாலினங்களின் உறவு நிலைமை சூழலைக் கணக்கில்கொண்டு, மருத்துவம், கல்வி, முடிவெடுப்பது, மற்றும் இன்ன பிறவற்றைப் பற்றி அரசுகளும் இதர தரப்பினரும் ஆய்வுகளை முன்னெடுக்க வேண்டும். சிறுவீத மீன்பிடிக்கான கொள்கைகளிலும், நிகழ்ச்சி நிரல்களிலும், திட்டங்களிலும் பாலின நுண்ணுணர்வுடன் தலையீடுகள் செய்வதற்காக பாலின ஆய்வுகளை மேற்கொள்வது பாலின வேறுபாடுகளைக் கணக்கில் கொள்வதில் (Gender mainstreaming) உள்ளடங்கியதாக இருப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். பாலின சமனற்ற நிலையை கண்காணிக்கவும் எதிர்கொள்ளவும், தலையீடுகள் எந்த அளவுக்கு சமூக மாற்றத்திற்குப் பங்களித்துள்ளன

என்பதைக் கண்டுணரவும் பாலின நுண்ணுர்வுள்ள குறியீடுகள் பயன்படுத்தப்பட வேண்டும்.

11.11 கடல் உணவு உற்பத்தியில் சிறுவீத மீன்பிடியின் முக்கியத்துவத்தை அங்கீகரித்து, மீன் உணவு உண்பதன் சத்துணவுப் பலன்களைப் பற்றிய விழிப்புணர்வை அதிகப்படுத்தவும், மீன் மற்றும் மீன் பண்டங்ளின் தரத்தை மதிப்பிடுவது எவ்வாறு என்று கற்றுக்கொடுக்கவும், நுகர்வோர் கல்வி நிகழ்வுகளின் போது மீன் உணவு உண்ணப்படுவதை அரசுகளும், பிற தரப்பினரும் ஊக்குவிக்க வேண்டும்.

## 12. திறன் மேம்பாடு (CAPACITY DEVELOPMENT)

12.1 முடிவெடுக்கும் நிகழ்வுப்போக்கில் சிறுவீத மீன்பிடி சமூகத்தினர் பங்கேற்பதை சாத்தியமாக்குவதற்காக, அவர்களின் திறனை, அரசுகளும் இதர தரப்பினரும் மேம்படுத்த வேண்டும். இந்த நோக்கத்திற்காக, சட்டபூர்வமான, ஜனநாயகத் தன்மைகொண்ட, பிரநிதித்துவ கட்டமைப்பின் வழியாக, மீனுற்பத்தி மதிப்பு கூட்டுதல் செயல்பாட்டுத் தொடரில் உள்ள அனைத்து சிறுவீத மீன்பிடியின் பல்வகைப்பட்ட துணைத்துறைகளும் பொருத்தமான முறையில் பிரதிநிதித்துவம் செய்யப்படுவது உறுதி செய்யப்பட வேண்டும். அதுபோன்ற கட்டமைப்புகளில் பெண்கள் சரிநிகர் வகையில் பங்கெடுப்பதை உறுதி செய்வதற்காக பணியாற்றுவதற்குக் குறிப்பான கவனம் செலுத்தப்பட வேண்டும். பெண்களுக்கென குறிப்பான பொருத்தப்பாடு உள்ள பிரச்சனைகளில், பல்வேறு மட்டங்களில் தன்னாட்சியுடன் தங்களை அமைப்பாக்கிக் கொள்ள, அவர்களுக்குப் பொருத்தமான மற்றும் தேவையான தனிப்பட்ட வெளியும், பொறியமைவும் ஏற்படுத்திக்கொடுக்கப்பட வேண்டும்.

12.2 சந்தையின் வாய்ப்புகள் மூலமாக சிறுவீத மீன்பிடியினர் பலன் பெறுவதை அனுமதிப்பதற்காக, உதாரணமாக, வளர்ச்சித் திட்டங்கள் மூலம் திறன் கட்டமைப்பதை அரசுகளும் பிற பங்காளிகளும் செய்ய வேண்டும்.

12.3 தற்போதுள்ள அனுபவ/பாரம்பரிய அறிவின் மீதும் திறன்களின் மீதும் திறன் கட்டமைப்பு மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதை அனைத்துத் தரப்பினரும் அங்கீகரிக்க வேண்டும். அத்துடன், ஆண்-பெண் உட்பட, எளிதில் பாதிப்புக்கு ஆளாகும் பிரிவினரும் ஒதுக்கப்பட்ட பிரிவினரும் உட்பட, தனிநபர் தேவைகளை பூர்த்தி செய்வதற்கான நெகிழ்வுத் தன்மையுள்ள, பொருத்தமான கற்றல் வழிமுறைகளை அளிக்கின்ற, அறிவுப் பரிவர்த்தனை நடக்கின்ற இரண்டு வழிப் பாதையாக அது இருக்க வேண்டும் என்பதையும் அங்கீகரிக்க வேண்டும். DRM மற்றும் CCAவுடன் சம்பந்தப்படுத்தி, சிறுவீத மீன்பிடி சமூகத்தினரின் மீண்டுவரும் திறனையும் தகவமைத்துக்கொள்ளும் திறனையும் கட்டமைப்பதை உள்ளடக்கியதாக திறன் மேம்பாட்டு நடவடிக்கைகள் இருக்க வேண்டும்.

12.4 அனைத்து மட்டங்களிலுமுள்ள அரசு அதிகாரிகளும் முகமைகளும், நிலைத்தன்மை கொண்ட சிறுவீத மீன்பிடி வளர்ச்சியை ஆதரிக்கும் வகையில் அறிவையும் திறனையும் வளர்ப்பதற்கு பணி செய்வதுடன், பொருத்தமான வகையில், வெற்றிகரமான கூட்டு மேலாண்மை ஏற்பாடுகளையும் உருவாக்குவதற்கும் பணி செய்ய வேண்டும். ஆய்வுக்கான தளங்கள் உட்பட, சிறுவீத மீன்பிடிச் சமூகத்தினருடன் இணைந்து ஆளுகையிலும் வளர்ச்சி நடவடிக்கையிலும் நேரடியாக ஈடுபடும் உள்ளாட்சி கட்டமைப்புகளுக்கும் அதிகாரப் பரவலுக்கும் குறிப்பான கவனம் செலுத்தப்பட வேண்டும்.

## 13. அமலாக்கத்திற்கு ஆதரவு அளித்தலும் கண்காணித்தலும் (IMPLEMENTATION SUPPORT AND MONITORING)

13.1 தேசிய முன்னுரிமைகளுக்கும் சூழலுக்கும் பொருந்திப்போகும் வகையில் இந்த வழிகாட்டு நெறிமுறைகளை அமலாக்கம் செய்யும்படி அனைத்துத் தரப்பினரும் ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

13.2 அரசுகளும், இதர அனைத்துத் தரப்பினரும் உதவிகள் பலன்தரும் வகையில் இருப்பதையும் நிதியாதாரங்கள் பொறுப்பார்ந்த வகையில் பயன்படுத்தப் படுவதையும் மேம்படுத்த வேண்டும். இந்த வழிகாட்டுதல்களை அரசுகள் மேற்கொள்ளும் தன்னார்வ முயற்சிகளுக்கு வளர்ச்சிப் பங்காளிகளையும், ஐக்கிய நாடுகளின் சிறப்பு பிரிவு முகமைகளையும், தெற்கு-தெற்கு ஒத்துழைப்புகள் உள்ளிட்ட பிராந்திய அமைப்புகளையும் ஆதரவு அளிக்கும்படி உற்சாகப்படுத்துகிறோம். தொழில்நுட்ப ஒத்துழைப்புகள், நிதியுதவி, நிறுவன திறன் மேம்பாடு, அறிவுப் பகிர்வு – அத்துடன் அனுபவப் பகிர்வு, தேசிய சிறுவீத மீன்பிடிக் கொள்கைகளை வளர்த்தெடுப்பதற்காக உதவி, தொழில்நுட்ப பரிவர்த்தனை ஆகியவை மேற்சொன்ன ஆதரவு நடவடிக்கைகளில் உள்ளடங்கியவையாக இருக்கலாம்.

13.3 அரசுகளும் இதரத் தரப்பினரும் ஒன்று சேர்ந்து வழிகாட்டு நெறிமுறைகளைப் பற்றிய விழிப்புணர்வை உருவாக்க பணியாற்ற வேண்டும். இந்த வழிகாட்டு நெறிமுறைகளை மொழிபெயர்த்தும், இதன் எளிமையாக்கப்பட்ட வடிவத்தினைப் பயன்படுத்தியும், சிறுவீத மீன்பிடியில் பணியாற்றுபவர்களுக்காக விநியோகம் செய்யலாம். சிறுவீத மீன்பிடியில் உள்ள பெண்கள் பாத்திரம் பற்றியும் பாலினம் பற்றியும் பலன் தரும் வகையில் தகவல்களைப் பரப்புவதை உறுதி செய்யவும் பெண்களின் நிலையை – அவர்களின் பணியை மேம்படுத்தவும் தேவையான நடவடிக்கைகளை அடிக்கோடிட்டுக் காட்டவும் அரசுகளும் இதரத் தரப்பினர்களும் குறிப்பிட்ட வகையிலான படிப்பு ஆவணங்களை உருவாக்கிக்கொள்ள வேண்டும்.

13.4 இந்த வழிகாட்டு நெறிமுறைகளின் நோக்கங்கள் மற்றும் பரிந்துரைகளை நிறுவனங்கள் அமலாக்கம் செய்ததின் முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கான கண்காணிப்பு முறையின் முக்கியத்துவத்தை அரசுகள் அங்கீகரிக்க வேண்டும். தேசிய உணவுப் பாதுகாப்பு என்ற சூழலில் முன்னேறிச் செல்லும் போதுமான உணவுக்கான உரிமை மற்றும் வறுமை ஒழிப்பு ஆகிவற்றின் மீது என்ன தாக்கம் ஏற்பட்டிருக்கிறது என்பதும் மதிப்பீட்டில் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும். கண்காணிப்பின் முடிவுகள், கொள்கை உருவாக்கத்திலும் அமலாக்கத்திலும் மாற்றம் செய்வதற்கான வாய்ப்புள்ள அமைப்பு கட்டமைப்பு அவசியமானதாகும். கண்காணிப்பின் போது, பாலின நுண்ணுணர்வுள்ள அணுகுமுறை, குறியீடுகள், புள்ளிவிவரங்கள் பாலினம் கருத்தில் கொள்ளப்பட வேண்டும். நிலைத்தன்மையுள்ள வள ஆதார மேலாண்மைக்கும் உணவுப் பாதுகாப்பிற்கும், வறுமை ஒழிப்பிற்கும் சிறுவீத மீன்பிடியின் உண்மையான பங்களிப்பு என்ன என்பதைச் சிறப்பாகப் புரிந்துகொள்வதற்கும் ஆவணப்படுத்துவதற்கும் வாய்ப்பளிக்கும், ஆண்கள் பெண்கள் உள்ளிணைத்த பங்கேற்பு மதிப்பீட்டினை அரசுகளும் இதர அனைத்துத் தரப்பினரும் விரிவாக மேற்கொள்ள வேண்டும்.

13.5 இந்த வழிகாட்டி நெறிமுறைகளின் அமலாக்கத்தைக் கண்காணிப்பதற்காக, பொருத்தமான வகையில், CSOக்களின் வலுவான பிரதிநிதித்துவம் இருக்கும் வகையிலும், பல்வேறு துறைகளின் பிரதிநிதித்துவம் இருக்கும் வகையிலும் தேசிய அளவிலான அமைப்பொன்றை அரசுகள் நிறுவிட வேண்டும். வழிகாட்டு நெறிமுறைகளை அமலாக்கம் செய்வதற்கும் கண்காணிப்பதற்குமான செயல்முறைகளை வளர்த்தெடுப்பது நடைமுறைப்படுத்துவது ஆகிய இரண்டிலும் சிறுவீத மீன்பிடி சமூகங்களின் சட்டப்பூர்வப் பிரதிநிதிகள் ஈடுபடுத்தப்பட வேண்டும்.

13.6 இந்த வழிகாட்டு நெறிமுறைகளின் அமலாக்கத்தை ஆதரிக்கும் வகையில் பிராந்திய அளவிலான செயல்திட்டங்களுடன், உலகளாவிய உதவித் திட்டத்தை உருவாக்குவதற்கு FAO மேம்பாடு உதவியும் ஆதரவும் வழங்க வேண்டும்.

இந்த உணவுப் பாதுகாப்பு மற்றும் வறுமை ஒழிப்பு என்ற பின்னணியில் நிலைத்தன்மையுள்ள சிறுவீத மீன்பிடியைப் பாதுகாப்பதற்கான தன்னார்வ வழிகாட்டுதல்கள் என்ற தொகுப்பு, 1995ஆம் ஆண்டு, ஐக்கிய நாடுகள் சபையின் உணவு விவசாய அமைப்பின் பொறுப்பார்ந்த மீன்வள நடத்தை விதித் தொகுப்புக்கு உதவியாக உருவாக்கப்பட்டதாகும். இனி இதனை நாம் நடத்தை விதி என்று குறிப்பிடுவோம். நடத்தை விதிகளின் கோட்டுபாடுகளுக்கும் வாசகங்களுக்கும் உதவுகின்ற வகையில் சிறுவீத மீன்பிடி துறைக்காக இந்த வழிகாட்டுதல்கள் உருவாக்கப்பட்டுள்ளன. சிறுவீத மீன்பிடியின் உண்மையான தோற்றம் தென்படும்படி இருத்தல், அதன் பாத்திரம் இனம் காணப்படுதல், அதனை மேம்படுத்துதல் ஆகியவற்றிற்கு உதவியாக இருப்பதையும் ஏற்கனவே முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கும் அதனை மேலும் முன்னேற்றுவதையும், தேசிய அளவிலும் சர்வதேச அளவிலும் பட்டினி–வறுமையை ஒழிக்க மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்குப் பங்காற்றுவதையும் இந்த வழிகாட்டுதல்கள் நோக்கமாகக் கொண்டுள்ளன. வாழும் மனிதர்களுக்கும், வருங்காலச் சமூகத்தினருக்கும் நிலைத்த தன்மையுள்ள சமூகப் பொருளாதார வளர்ச்சி அளிப்பதற்கும், பொறுப்பார்ந்த மீன் வளத்திற்கும் ஆதரவாக வழிகாட்டு நெறிமுறைகள் உள்ளன. மேலும், மனித உரிமையை அடிப்படையாகக் கொண்டுள்ளதாகவும் சிறுவீத மீனவர்கள், மீன் தொழிலாளர்களுக்கு, அவர்கள் தொடர்பான நடவடிக்கைகளுக்கு முக்கியத்துவம் அளிப்பதாகவும் வழிகாட்டு நெறிமுறைகள் அமைந்துள்ளன.

ISBN: 978-93-80802-41-1